விலை சதம் 5

வெளியூர்ப் பதிப்பு

மக்களுக்கு

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
8 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411

நாமார்க்கும் குடியல்லோம்

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு கார்த்திகை 18உ புதன்கிழமை — Colombo, December, 3, 1947 — ஹிஜிரி 1366 இதழ் 183

உங்கள் தேவைக்கான

சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள், பால் உணவுகள், டின் ஆகார வகைகள், இங்கிலீஷ் பிஸ்கெட்டுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நிதானமான விலையில் கிடைக்கும்.

கே. எம்.
அரிசிமியாப் பிள்ளை & சன்ஸ்,
347, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

ஆடம்பரப் பொருட்கள்மீது அதிகமான வரிகள்

இறக்குமதி வரிகளும், வருமான வரிகளும் உயர்வு

பீடி, சிகரட், புகையிலை, வாசனைத் திரவியங்கள், பட்டுத் துணிகள், மோட்டார்கள், கார் சாமான்கள், ரேடியோ, சினிமா பிலிம் | ஐஸ் மாமிசம், டின் மாமிசம், டின் மீன், வெண்ணெய், சீஸ், இனிப்புப் பண்டங்கள், ஆரஞ்சு, திராட்சைப் பழங்கள்.

தேங்காய் திருவல் ஏற்றுமதி வரி அதிகரிப்பு

ஜின், பட்டு இறக்குமதியை வீழ்த்த அபார வரி

புது வரிகளால் கிடைக்கும் வருட வருமானம் 4 கோடி ரூபாய்

பாராளுமன்றத்தில் நிதி மந்திரி அறிவிப்பு

கொழும்பு, டிச. 2

நேற்று பாராளுமன்றத்தில் நிதி மந்திரி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா இரண்டாவது முறையாக அரசாங்க வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துப் பேசிய போது கீழ்க்கண்ட புதிய வரிகள் விதிக்க உத்தேசித்திருப்பதாகத் தெரிவித்தார்:-

புதிய வரிகள்

1 கம்பெனி வரி

கம்பெனி வரி 20 சத விகிதத்திலிருந்து 25 சத விகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது இதனால் வருடத்திற்கு 50 லக்ஷ ரூபாய் வருமானம் கிடைக்கும்.

2 பூதல் வரி

பூதல் வரி விகிதங்கள் 20,000 ரூபாய் வருவாய்க்கு மேற்பட்ட வருவாய்கள் மீது அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் வருடத்திற்கு 40 லக்ஷ ரூபாய் கிடைக்கும்.

3 ஷேர்கள் ஸ்டாம்பு வரி

ஷேர் (பங்கு) மாற்றங்கள் மீது ஸ்டாம்பு வரி 50 சத விகிதம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இதனால் ரூபாய் 250,000 கிடைக்கும். ஷேர் சர்ட்டுபிகேட்டுகள் மீது இப்பொழுது அரை சத விகிதமாக இருக்கும் வரி ஒரு சதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதனால் ரூ. 50,000 கிடைக்கும்.

ஏற்றுமதி, இறக்குமதி வரிகள்

1 பீர் வகையரு

இம்பீரியல் கலன் ஒன்றுக்கு ரூபாய் 2-50 வீதம் வரி அதிகரிப்பு. இதன் மூலம் வருடத்திற்கு 6 லக்ஷ ரூபாய் வருமானம் இதனால் சாம்ராஜ்ய நாட்டு பீர் போத்தல் ஒன்றுக்கு 42 சதமும் அந்நிய நாட்டு பீர் போத்தல் ஒன்றுக்கு 35 சதமும் விலை அதிகரிக்கும்.

2 பிரண்டி

உயர்ந்த ரகம் இம்பீரியல் கலன் ஒன்றுக்கு ரூபாய் 81-50 வீதம் வரி உயர்வு மட்ட ரகம் இம்பீரியல் கலன் ஒன்றுக்கு ரூபாய் 92-75 வீதம் வரி உயர்வு மட்ட ரக பிரண்டி இறக்குமதியைக் குறைக்கவே அதற்கு உயர்ந்த ரக பிரண்டியை விட வரி அதிகமாக விதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வித வரி உயர்வால் பிரண்டி இறக்குமதி 50 சத வீதம் குறையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் உயர்ந்த ரக பிரண்டி போத்தல் ஒன்று ரூபாய் 13-50 ஆகவும் மட்ட ரக பிரண்டி ரூபாய் 15-46 ஆகவும் விற்கிறபடி மேற்படுகிறது. இவ்வரி மூலம் வருடத்திற்கு ரூபாய் 470,000 கிடைக்கும்.

3 விஸ்கி

பிரண்டியைப் போன்ற வீதாசாரப்படியே விஸ்கிக்கும் வரி விதிக்கப்பட்டுள்ளது இதனால் வருடத்திற்கு ரூபாய் 1,350,000 கிடைக்கும்.

4 ஜின்

இம்பீரியல் கலன் ஒன்றுக்கு சலுகை வரி ரூபாய் 92-75 ஆகவும் பொது வரி ரூபாய் 89 ஆகவும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த வரியால் ஜின் இறக்குமதி குறையுமாதலால இந்த இனத்தில் வருடத்திற்கு வருமானத்தில் 3 லட்சம் நஷ்டம் ஏற்படும் இதனால் சாம்ராஜ்ய நாட்டு ஜின் போத்தல் ஒன்றுக்கு ரூபாய் 15-46 ஆகவும் அந்நிய நாட்டு ஜின் போத்தல் ஒன்றுக்கு ரூபாய் 14-83 ஆகவும் விலை உயரும்.

5 ஒயின்

இந்த இனத்தின் வரி உயர்வில 5 லக்ஷ ரூபாய் வருடத்திற்கு வருமானம் கிடைக்கும்.

மேற்குறிப்பிட்ட மதுபான வகையருக்கள் மீது விதிக்கப்பட்ட அதிக வரிகளால் 25 லக்ஷ ரூபாய் அதிக வருமானம் கிடைக்கும்.

6 புகையிலை

ஒரு பவுண்டுக்கு ரூபாய் 4-10 வீதம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் வருடத்திற்கு ரூபாய் 21 லட்சம் கிடைக்கும்.

7 சிகரெட்

50 சிகரெட் உள்ள டின் ஒன்றுக்கு 50 சத விகிதம் வரி அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

8 பீடி

ஒரு பவுண்டுக்கு 2 ரூபாய் வீதம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இதனால் வருடத்திற்கு 20 லக்ஷ ரூபாய் கிடைக்கும்.

9 மோட்டார்கள்

மோட்டார் 'ஹார்ஸ பவரை' அடிப்படையாகக் கொண்டு வரி விதிக்கப்படும். 10 ஹார்ஸ் பவருள்ளதும் அதற்குக் கீழுள்ளதுமான மோட்டார் கார்களுக்கு சலுகை வரி 30 சத விகிதமும் பொது வரி 37 அரை சத விகிதமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. 16 ஹார்ஸ பவருக்குக் கீழுள்ளதுமான மோட்டார் கார்களுக்கு சலுகை வரி 45 சத விகிதமும் பொது வரி 52 அரை சத விகிதமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. 16 ஹார்ஸ பவருக்கு மேலுள்ள மோட்டார்கார்களுக்கு சலுகை வரி 70 சத விகிதமும் பொதுவரி 7 அரை சத விகிதமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் வருடம் பத்து லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கும்.

10 மற்ற மோட்டார் வாகனங்கள்

மற்ற மோட்டார் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் மீது விதிக்கப்பட்டுள்ள அதிக வரிகளால் வருடம் ரூ 250,000 கிடைக்கும்.

11 மோட்டார் கார்களின் சில்லரைச் சாமான்கள்

வரி விகிதம் 10சத வீதம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இதனால் வருடம் 2 லட்ச ரூபாய் கிடைக்கும். [மோட்டார் கார் மோட்டார் மற்ற மோட்டார் வாகனங்கள் முதலியவைகள் மீது விதிக்கப்படும் அதிக வரிகளால் மொத்தம் வருடத்திற்கு ரூ 1,450,000 கிடைக்கும்.]

12 வாசனைத் திரவியங்கள், முகப்பவுடர், ஸநோ, லிப்ஸடிக் வகையரு

60 சதவிகிதம் வரி உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் வருடத்திற்கு 10 லட்ச ரூபாய் கிடைக்கும்.

13 ஐஸ மாமிசம், டின் மாமிசம்

[கோழி, பன்றி மற்ற மிருகங்கள்] 35 சத விகிதம் வரி அதிகரிக்கபபடடுள்ளது. இதனால வருடம் 25லட்ச ரூபாய் கிடைக்கும்.

14 டின் மீன்

30 சத விகிதம் வரி உயர்வு. இதனால் வருட வருமானம் ரூ 750,000 கிடைக்கும்.

15 வெண்ணெய், சீஸ

25 சத விகிதம் வரி உயர்வு. இதனால் வருடம் ரூ. 1,250,000 கிடைக்கும்.

16 இனிப்புத்தின்பண்டங்கள்

35 சத விகிதம் உயர்வு. வருட வருவாய் ரூ 550,000.

17 பழவர்க்கங்கள் (ஆப்பிள் திராக்ஷை)

40 சத விகிதம் வரிஉயர்வால் ரூ. 900,000 கிடைக்கும்.

18 ஜாம், ஜெல்லி

45 சத விகித வரி உயர்வு வருட வருமானம் ரூ 650,000.

19 சினிமா பிலிம்

ஒருஅடிக்கு 2அரைசத விகித வரிஉயர்வால் ரூ. 50,000 கிடைக்கும்.

20 வயர்லெஸ சாமான்கள்

20 சத விகிதம் வரி உயர்வு. வருட வருமானம் ரூ. 300,000.

21 பட்டு, செயற்கைப்பட்டு

30 சத விகிதம் 40 சத விகிதத்திலிருந்து 90 சத விகிதம் 100 சத விகிதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் இறக்குமதி மூன்றில் இரண்டு மடங்கு குறையுமாதலால், வருமானத்தில் ரூ. 900,000 நஷ்டம் ஏற்படும்.

22 துறைமுக வரி

உயர்வால் வருடம் ரூ. 28 லட்சம் கிடைக்கும்.

23 தேங்காய் திருவல் ஏற்றுமதி வரி

இந்த வரி உயர்வால் வருட வருமானம் ரூ. 40 லட்சம் கிடைக்கும்.

மேற்குறிப்பிட்ட எல்லா வரி உயர்வுகளாலும் வருடத்திற்கு 4 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும்.

நிதி மந்திரி பிரசங்கம்

பாராளுமன்றக் கூட்டம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் திரு. ஏ. எப். மெல்லமுரே தலைமையில் நடைபெற்றது. திரு. எச். சீர்தரிரகனு இச்சமயத்தில் எழுந்து, அங்கத்தவர்கள் சுதேச பாஷைகளில் பேசுவதை இனி அனுமதிக்க முடியுமா என்று சபாநாயகரைக் கேட்ட போது, அதற்கு இன்னும் சந்தர்ப்பம் வரவில்லையென்று சபாநாயகர் கூறினார்.

விரிவான வரவு செலவுத் திட்டம்

நிதிமந்திரி 1947-48 நிதிவருட வரவுசெலவுத் திட்டத்தை இரண்டாவது தடவையாக சபையில் ஆஜர் செய்து பின்வருமாறு பேசினார்:-

சாத்தியமானவரையில் மக்களது சுபீட்ச நிலையை பாதுகாக்கக் கூடிய வழியிலே இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த பட்ஜெட்டில், வருடத்தில் எடுக்கப்பட ஆலோசித்து முடிவு செய்யப்பட்ட விஷயங்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது மக்களது தேவையை பூர்த்தி செய்ய எல்லாம் செய்யபபட்டுள்ளன பயமின்றியும் பாரபட்சமின்றியும் எல்லாம் செய்யப்பட்டுள்ளன. இது ஒரு தற்காலிக நிர்வாக வரவு செலவுத் திட்டமுமல்ல. இது இடைக்கால வரவு செலவுத் திட்டமுமல்ல. ஆனால் இது விரிவான ஒரு வரவு செலவுத் திட்டமாகும்.

இத்திட்டத்தில் 1947-48 நிதி வருடத்துக்கு [அக்டோபர் 1947 முதல் செப்டம்பர் 1948 வரை] வேண்டிய வரவு செலவுகளைக் கொண்ட விஷயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்நிதி வருட உததேசக் கணக்குகள் முதலில் மந்திரிமாரால அங்கீகரிக்கப்பட வேண்டும் மந்திரிமார் 10 நாட்கள் இதன் மீது ஆலோசனை செய்து பிரயோஜனப்படக்கூடிய விஷயங்கள் பற்றி சிபார்சு செய்தனர், அதன்பின் பட்ஜெட்டை நான் பரிசீலனை செய்து பார்த்தேன். நான் பல அரசாங்க இலாகாக்களின் அதிகாரிகளுடனும் பட்ஜெட் சம்பந்தமாக கலந்து ஆலோசித்தேன் அவர்களது முழு ஒத்துழைப்பும் கிடைத்தது. இது எனது ஐந்து வருட அலலது 10 வருட வேலைத் திட்டமாக இருக்கும்.

வரவு-செலவு

அண்மையிலுள்ள நாடான இந்தியாவிலுள்ள மாகாணங்களுடன் ஒத்திட்டு நோக்கும் போது அளவில் இலங்கை சிறியதாக இருப்பினும வரவு செலவு விகிதாச்சாரதத்தில் அந்த மாகாணங்களையும்விட இங்கு அதிகம். இலங்கையின் வருமானம் 44 கோடியே பத்து லட்சம் ரூபாய் ஆகும். செலவு 43 கோடியே ஐம்பது லட்சம ரூபாய் ஆகும். வருமானம்-செலவு இரண்டையும் பொறுத்த அளவில் தனிய சென்னை அரசாங்கமே எங்களில் பார்க்க அதிக வரவு செலவை உடையதாக இருக்கிறது. ஆனால் இந்தியாவிலுள்ள மற்ற மாகாணங்களுடன் ஒத்திட்டுப் பார்க்கும போது இலங்கையின் வரவும செலவும் அதிகமாகவே இருக்கிறது.

எந்த நல்ல அரசாங்கமும் அதன் வரவு செலவுத் திட்டத

[4-ம் பக்கம் பார்க்க]

"பிரிட்டிஷ் படைகள்தான் இலங்கையைப் பணச் செலவின்றி பாதுகாத்து தரும்!"

—சேனநாயக்கா

"பிரிட்டிஷ் படைகள் பிரஜைகள் மீது பிரயோகிக்கப்பட மாட்டாவா?"

—கெனமன்

"திரிகோணமலைக்கும், கோகலைக்கும் பதிலாக லண்டனும் கார்டிவ்வும் கொடுக்கப்படுமா?"

—தகநாயகா

பிரதிநிதிகள் சபையில் சுதந்திர மசோதா

கொழும்பு, டிச 2

பிரதம மந்திரி திரு டி. எஸ் சேனநாயக்கா, "இலங்கை சுதந்திர மசோதா"வையிட்டு, பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபையின் குதூகலத்தைத் தெரிவித்துக் கொள்ளுமாறு இன்று பிரதநிதிகள் சபையில் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய போது, "எமது சுதந்தரம், நாம் எம் தேசத்தைப் பாதுகாத்துக்கொள்ளுவதற்கு, ஏதாவது ஒப்பந்தத்திலோ அல்லது யாராவது ஒருவரிலோ தங்கியிருக்க வேண்டியே இருக்கின்றதென்பதை நாங்கள் ஒழியாமற் சொல்லவேண்டியே இருக்கின்றது"

"இப்பாதுகாப்பிற்காக நாம் எவருக்காவது பணம் கொடுக்கக்கூடிய நிலைமையும் எமக்கில்லை" என்று அழுத்தமாகக் கூறினார்

"எங்கள் இலங்கையைச் சுற்றிப் பார்க்கும்பொழுது, இந்தச் சமயத்தில் பிரிட்டன் ஒன்றுதான் விருப்புடனதங்கள் செலவில் பாதுகாப்பைத் தரக்கூடியதாக விருக்கின்றது."

தொடர்ந்து திரு. சேனாயக்கா சொன்னதாவது:-

"நூறு வருடங்களுக்கு மேலாக இலங்கை பிரிட்டனால் ஆளப்பட்டு வந்திருக்கின்றது. கடலோரப் பிரதேசங்கள் இன்னும் கூடிய காலமாக ஆளப்பட்டுவந்துள்ளன ஆகவே இப்பொழுது நாம பெறும் சுதந்திரம் நியந்தனையற்றதாகும்.

"இலங்கைப் பாராளுமன்றம் விநியோகப்படி பிரிட்டனை விட்டு விலகிக்கொள்ளவும் பிரிட்டிஷ் பாராளுமன்றம் இம் மசோதா மூலம் இடமளித்திருக்கின்றது.

"பிரிட்டிஷ் பாராளுமன்றம் கொடுக்கக்கூடிய முழுச் சுதந்திரமும் இம் மசோதா மூலம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

"நான் இச்சுதந்திர மசோதாவை சுதந்திரச் சட்டம் என்று பெயரிடும்படி கேட்டேன். பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இச்சட்டம் விவாதிக்கப்பட்ட பொழுது எந்தக் கட்சி அங்கத்தினரும் ஆட்சேபிக்கவில்லை. ஏக மனதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

"இலங்கை டொமினியன் அந்தஸ்தை அடைவதற்கு இப்பொழுது தகுதியுள்ளது. இதில் இச் சபையில் விவாதமிருக்க மாட்டாதென்றே நம்புகிறேன்.

மேலும் திரு. சேனநாயக்கா கூறியதாவது:-

"இலங்கை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் அந்தஸ்தையும் பெற்றுள்ளது.

சென்ற காலங்களில் எங்கள் அந்நிய நாட்டுக் கொள்கைகளை பிரிட்டனே நடத்தி வந்தது ஆனால் இனிமேல் இலங்கையே கொண்டு நடத்தும்.

"அயலில் உள்ள இந்திய டொமினியனுடன் இலங்கை சிநேகப்பான்மையுடன் இருக்க வேண்டும்.

"சென்ற யுத்தத்தில் பிரிட்டிஷ் ஆகாயப்படை, கடற்படை, இராணுவம் இலங்கைக்கு வந்த உணவுக் கப்பல்களை பாதுகாத்துவந்தது எனக்குத் தெரியும்.

இலங்கை தன்னைத் தான் பாதுகாத்துக்கொள்ளும் காலம் வரும் வரைக்கும் இங்கிலாந்து தான் பாதுகாக்க வேண்டும்.

"பிரிட்டனுக்குத் தளங்கள் கொடுப்பது இலங்கையைப் பாதிக்காது"

மேலும் பேசியபோது திரு சேனநாயக்கா இலங்கையின் சுதந்திர வீரர்களாகிய ஸர். பி. இராமநாதன், ஸர். பி. அருணாசலம், திரு. எப். ஆர். சேனாநாயக்கா, ஸர். ஜேம்ஸ் பீரிஸ், திரு. லோரன்ஸ், ஸர். டி. பி. ஜயதிலகா ஆகிய வர்களின் முயற்சியைப் பாராட்டினார்.

திரு. பீட்டர் கெனமன் பேசியபோது கூறியதாவது:-"பிரதம மந்திரியின் திடீர் நடவடிக்கைகள் எல்லோருக்கும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

பிரிட்டனுக்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் இரு அரசாங்கத்தாலும் நடத்தப்பட்டனவா?

உண்மையில் சுதந்திரம் கிடைத்திருந்தால் இச்சபையில் ஒரு எதிர்ப்பும் இருக்கமாட்டாது. மேலும் திரு. கெனமன் கூறியதாவது:-

"இவ்வளவு காலமும் நேரடியான பிரிட்டிஷ் ஆட்சி நடந்தது இனிமேல் மறைமுகமான பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சுதந்திரம் ஒரு கட்டுக் கதைதான்.

இப்பொழுது எம்மை குதூகலப்படும்படி கேட்கப்பட்டுள்ள சுதந்திர மசோதா எந்த விதத்திலும் டொமினியன் அந்தஸ்தல்ல. இத்தேச மக்களின் மீது இங்கு வைக்கப்பட்டிருக்கும் பிரிட்டிஷ் படைகள் உபயோகிக்கப்படமாட்டாது என்பதற்கு ஒருவிதமான உறுதியும் கொடுக்கப்படவில்லை.

திரு. டி. பி. ஜாயா பேசியபோது, திரு பீட்டர் கெனமன் சுதந்திர மசோதா சம்பந்தமாக ஐயுறவை ஏற்படுத்தியதை பிட்டு ஆச்சரியப்பட்டார்.

தலவாகொல்லைப் பிரதிநிதியாகிய திரு ஸி. வேலுப்பிள்ளை கூறியதாவது:-

"தேச மக்களுக்கு விருப்பமில்லாத ஒரு சுதந்திரத்தைத் திணிக்க ஒரு அரசாங்கம் விரும்புவது முறையல்ல."

காலி பகுதி பிரதிநிதி திரு டபிள்யூ. தகநாயக்கா பேசியதாவது:-"இப்பொழுது திணிக்க அவதிப்படும் சுதந்திர மசோதாவையிட்டு பிரதம மந்திரியும் அவருக்குப் பந்தம் பிடிப்பவர்களும் பின ஒரு நாளைக்குத் துக்கப்படுவார்கள்.

எதிர்காலத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கொள்கைகளைக் கொண்டு நடத்துவதற்கு எவ்வொன்றும் பிரதம மந்திரியும் ஆயுதங்களாக உபயோகிக்கப்படுவார்கள்.

புதிய பிரிட்டிஷ் இலங்கை ஒப்பந்தப்படி திரிகோணமலையும், கோகலையும் பிரிட்டனுக்குக் கொடுக்கப்படுகிறது

இரு தேசங்களுக்குமிடையில் பரஸ்பர நட்பு ஒப்பந்தம் இருக்கின்றதென்றால் லண்டனையும், கார்டிவ்வையும் இலங்கைக்கு பிரிட்டன் கொடுக்குமா?

தொடர்ந்து தகநாயகா கூறியதாவது:-

"இட்துசாரிக் கட்சியை ஆதரிப்பவர்கள் இலங்கையில் தினமும் அதிகரிக்கிறார்கள். ஆகவே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தொடர்பைத் துண்டிக்க வேண்டும்.

சரித்திரத்தில் பிரதம மந்திரி திரு. சேனநாயக்கா ஆசியாவின் ஒண்ணும் நம்பர் துரோகி என்று பதிவு செய்யப்படும்,"

சபாநாயகர் திரு. தகநாயகாவை "துரோகி" என்னும் சொல்லை வாபஸ் வாங்குமபடி கேட்டார். அப்படியே திரு. தகநாயகா செய்தார்.

உணவு மந்திரி திரு. ஏ. ரத்னாயகா கூறியதாவது:- "ஆசியாவில் நூற்றுக்கு 51 வீதம் மக்களை ரஷியாவுக்கு விற்கப்பட்டு விட்டார்களை வாலிபர்கள் ரஷியக் கொள்கைகளைக் கொண்டு ஸ்திரமுள்ள அரசாங்கங்களைத் தகர்த்தெறிய முற்பட்டிருக்கின்றனர். பிரிட்டிஷ் அரசாங்கமோ முழு உலகத்திற்கும் சேவை செய்ய முன்வந்திருக்கிறது.

"பிரிட்டன் ஆசியாவை விட்டு வெளியேறுகின்றது. ஆனால் இன்னுமொரு பெருந்தேசம் தன் ஆதிக்கத்தைச் செலுத்த முற்பட்டிருக்கிறது.

திரு. எச். ஸ்ரீநிஸங்கா பிரிட்டன் இன்றைய ஆதிக்கநிலைக்கு வந்த முறையையும் அதன் வளர்ச்சிகளைப பற்றியும் குறிப்பாகப் பேசினார். கடலில் பிரிட்டன் தன் ஆதிக்கத்தை வளர்த்துக் கொண்டதால், ஸ்பானிஷ் கப்பல்களில் வந்த பொருள்களை கொள்ளையடித்து தங்கள் நாட்டுக்குக் கொண்டு சென்றனர் என்றும் அதன் பின் இலங்கை அவர்களுடைய கையில் சிக்குண்ட வரலாறு பற்றியும் கூறினார். தொடர்ந்து பேசுகையில், இன்று அரசாங்க கட்டிடங்களில் பழைய சிங்களக் கொடி பறப்பது தமக்கு சந்

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN."
194 6, நட்டாந் தெரு, கொழும்பு.
போன்: 3411.
சர்வஜித்து ஆண்டு கார்த்திகை மீ 18உ
புதன் கிழமை

ஏழை மக்களுக்கு விமோசனமில்லை

சோல்பரி அரசியலில் முதலாவது வரவுசெலவுத் திட்டம் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதை யிடடு பேசிய நிதி மந்திரி பாலை குறைந்தால் தணணீரை ஊற்றிச் சமன் செய்யும் முறையையே கையாண்டிருக்கிறார் என்பது வெளிப்படை. இலங்கையின் வருடாந்த வருமானம் குறைந்துவிட்ட தாகையால் செலவுகளைச் சமாளிப்பதற்குப் புதிய வரிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது என்று கூறியுளளார். அவ்வரிகளும் ஆடம்பரப் பொருடகளின் மீதுதான் விதிக்கப்படடுள்ளனவாம். இது ஒரு அளவில் நலலதுதான். ஆனால் பொது மக்களின் வாழ்க்கைத்தரமோ வருடாவருடம் உயர்ந்து கொண்டே போகின்றது. சென்ற 1938-ம் ஆண்டில் வாழ்க்கைத்தர நிலை 100 ஆக இருந்தது. இப்பொழுது 249 ஆக இருக்கின்றது. இதற்குக் காரணம் கூறும் நிதி மந்திரி தமது அரசாங்கம் உணவுப் பொருள்களுக்குப் பண உதவி செய்தால்தான வாழ்க்கைத் தரத்தைக் குறைக்க முடியும் என்று சொலலுகின்றார். இப்பொழுது ஒரு கொதது அரிசி 36 சதமாக விற்கப்படுகின்றது. ஆனால் அரசாங்கததிற்கு அதன் கொளவிலை 62 சதமாகும். 26 சததிற்கு அரிசியைக் கொடுப்பதற்காக அரசாங்கம் 26 சதம் நஷ்டம் கொடுக்க வேண்டியிருக்கின்றது இவ்விதம் உள்ள நஷ்டம் அரசாங்கததிற்கு ஒரு மாசம் பத்தரை லட்சம் ரூபாவாகும். இதற்கு மேற்கொண்டு அரசாங்கம் பண உதவி செய்ய முடியாது என்று விட்டார் நிதி மந்திரி. ஆகவே வாழ்க்கைத்தரம் குறையமாடடாது என்பது தணணம். அரைக் குறைப்பதற்கு அவர் ஆலோசிக்க மறுத்து விட்டார் என்றும் தோன்றுகின்றது.

யுத்த காலம் தொடக்கம் இன்று வரைக்கும் அரசாங்கம் தான உணவுப் பொருடகளை இறக்குமதி செய்கின்றது. யுத்ததிற்கு முன் ஒரு வியாபாரியும் ஒரு களாராகவும் செய்த தொழிலை இன்று பல இலாகாகள் ஏற்படுத்திச் செய்யப்படுகின்றது இதற்கென உணவு கமிஷனர்களும் மற்றும் கமிஷனர்களும் ஒரு பெரும் பட்டாளம் குமாஸ்தாக்களும் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றனர். இவர்கள் அரசதனைப் பெரும் இத தொழிலில ஈடுபட்டவர்கள் அலலர். ஆகவே அவர்கள் இப்பொழுதுதான் அனுபவம் பெற வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இந்த நிலையில அரசாங்கம் உணவுப் பொருள் இறக்குமதி செய்வதில நஷ்டமடையாமல் வேறு என்னதான் செய்யும்? வாழ்க்கைத்தரததைக் குறைக்க ஏழை மக்களின் கணணீரை ஓடிபபதாக வருந்தால் இதுதான் சிரதததை எடுக்கவேணடும். அரசாங்கம் பொருள்களை ஏற்றுமதி செய்விக்கும் முறையை முற்றாக மாற்றி அமைக்க வேணடும். முககால பங்கு உலகதில இருந்து பொருள் வருவாயைப் பெறும் பிரிடடனின் வாழ்க்கைத்தர நிலை 135 தானாகும். இது மிகவும் அதிகரித்ததுவடடது என்று பிரிடடிஷ் பககள் கண்ணீர் வடிககின்றார்கள் இந்த நிலையில் சிலனஞ் சிறிய இலங்கை ஏழை மகளின கஷடததை உணரா துகொள்ளலாம்.

ஐக்கிய சங்கக்கடையில் களவு

கொழும்பு, டிச. 2

தெபுவன ஐக்கிய சங்ககடையில் இருந்து ரூபா 2577 சதம்69 பெறுமதியான பாலடின், முதலிய பொருட்கள் நேற்றிரவு களவாடப்பட்டுவிடடன

இதனைச் செய்த கள்வன் யார் என்பது இதுவரை மர்மமாகவே இருக்கிறது. (ந-நி)

தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

ரத்தினபுரியில் பொதுக் கூட்டம்

தலைவர்களின் பேச்சுகள்

ரத்தினபுரி, டிச. 2

இலங்கை இந்திய காங்கிரஸ் ஆதரவுள் தொழிலாளரில் மிகப பெரிய கூட்டமொன்று திரு ஜி. ஆர். மோத்தா தலைமையில ரத்தினபுரி முற்றவெளியில் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றது. பாம்காடன் ஏஸடேடடில் வேலை நிறுத்தம் செய்யுட தொழிலாளர் ஊர்வலமாக முற்றவெளிக்கு வந்து சேர்ந்தனர் கூட்டததில் ஜனாப் ஏ அஸீஸ பேசுகையில கூறியதாவது:-

சமாதானமான முறைகளால நெருக்கடியை நீக்குவதற்குத் தொழிலாளர் சங்கம் முயற்சி செய்தது. ஆனால் நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு அதிகாரிகள் எல்லா தகுதிவாய்ந்த தீர்மானங்களையும் நிராகரித்து விட்டனர். அதிகாரிகளின் இந்த நடவடிக்கை 1700 தொழிலாளர்களை வேலை நிறுததம் செய்யத் தூண்டிவிட்டது. நிர்வாக அதிகாரிகளும் சட்டததனால் பாதுகாக்கப படுகின்றனர். அதே சட்டத்தை உபயோகித்து இந்த டிஸ்டிரிக்டிலுள்ள முழு தொழிலையும் நிலை குலையச் செய்து அரசாங்கத்தை தாழ்ந்து வரச்செய்து கோரிக்கைகளை பெறப் படும்.

ஸ்ரீமதி ஆயிஷா ராஜப் பேசுகையில் இந்த நெருக்கடியை சமரஸமாக விரைவில் தீர்த்துக் கொள்ள கடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கூறினார்

திரு. எஸ். எம் சுப்பையா பேசுகையில் தொழிலாளர்களின திடமான தீர்மானததைப் பாராட்டினார்.

திரு. கே ஜி. எஸ். நாயர் பேசுகையில் தொழிலாளர் வேலை நிறுததததைப் பறறிக் குறிப்பிட்டுவிட்டு அவர்களிடம் அதிகாரிக்கைகள் வழங்கப்படாது விட்டால் தொடாந்து வேலை நிறுத்தம் நடக்குமென்றும் கோரிக்கைகள் வழங்கப்பட வேண்டுமென்றும் கூறினார்.

சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு. ஏ. எச். விஜயதுங்கா, திரு. எல். அப்புஹாமி ஆகியோர் பேசுகையில் இத் தொழிலாளரின் வேலை நிறுததததுக்கு சிபந்தனைகளின்றி உதவி புரியும்படி கூறினார்கள்.

போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. எஸ். செல்லையா பேசுகையில் இந்த வேலை நிறுத்தம் தொழிலாளரின் பொதுப் போராட்டமென்றும், ஆகவே அந்தப் போராட்டத்துக்கு எல்லோரும் உதவ வேணடுமென்றும் கூறினார். சங்ககதின் முடிவான தீர்மானங்களை தொழிலாளர் எதிர்பார்த்தது அவற்றின்படி நடக்கவேண்டுமெனக் கூட்டததில் முடிவு செய்யபபட்டது.

சுதந்திர இந்தியாவின் முதல் கடன்

அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற எடுப்பப்படும்

இந்திய பாராளுமன்றத்தில் நிதி மந்திரி அறிவிப்பு

புதுடில்லி, டிச. 2

இந்திய பாராளுமன்றததில் நிதி மந்திரி திரு. ஆர் கே. ஷண்முகம் செட்டியார் பின்வருமாறு தெரிவித்தார்:- இம்மாதத்தியில் இந்தியாவின் ஸடெர்லிங் நிதிப் பிரச்னை சம்பந்தமாக சமரசப் பேச்சு நடத்த லண்டனிலிருந்து இரு பிரிடடிஷ் அதிகாரிகள் புதுடில்லிக்கு வருவார்கள். ஸடெர்லிங் நிதி சமபந்தமாக 1948 ஜூன் மாதம் முடிய ஒரு இடைக்கால ஒப்பந்தம் செய்ய உத்தேசித்திருக்கிறேன். அதன் பிறகு நிரந்தரமான ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும் அரசாங்கத்தின் பெரிய அபிவிருத்தித் திட்டங்களை மூல் செயயும்பொருட்டு இந்திய சர்க்கார் புதிதாக கடன் எழுப்ப உத்தேசித்திருக்கின்றனர் சுதந்திர இந்தியாவின் முதலாவதான இடபுறய கடனுக்கு 'சுதந்திரக் கடன்' என்று பெயரிடலாமென்று உத்தேசிக்கிறேன். (அ-பிரஸ்)

தென்னாப்பிரிக்க இந்தியருக்கு

விஜயலட்சுமி பண்டிட் செய்தி

திரு. வி.கே. கிருஷ்ணமேனனுக்கு பிரிட்டிஷார் புகழ்மாலை

கூர்க்க ராணுவத்தின் மீது பிரிட்டனின் ஆசை

முத்து, ரத்தினங்களை இறக்குமதிசெய்ய இந்திய சர்க்காரின் கட்டுப்பாடு

புதுடில்லி, டிச 2

இந்தியாவுக்கும் பர்மாவுக்குமிடையே ஒப்பந்தம் ஏற்படுத்துவது சம்பந்தமாக இந்தியா பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேருவுடன் சமரசப் பேச்சுகள் நடத்த பர்மா பிரதம மந்திரி தக்கின் நூவும் பர்மா அந்நியநாட்டு மந்திரி ஊடிண்டுட்டும் இன்று ரங்கூனிலிருந்து புறப்பட்டு டில்லி வந்து சேர்ந்தார்கள்.

வைரம் இறக்குமதி கட்டுப்பாடு

புதுடில்லி, டிச 1

இந்தியாவில் பதப்படுத்தி மீண்டும் ஏற்றுமதி செய்வதற்காக இறக்குமதி செய்யப்படுவைரங்கள், மற்றுமுள்ள ரத்தினக் கற்கள். முத்துக்கள் பதிவெட்டு ரத்தினங்கள் ஆகியவைகளின் இறக்குமதியைக் குறிப்பிட்ட அளவிற்கு இந்திய சர்க்கார் கட்டுப்படுததியிருக்கிறார்கள்

பதம் செய்யப்பட்ட மேற்குறிப்பிட்ட பொருட்களை சென்ற 6 மாத காலததில் ஏற்றுமதி செய்த வர்ததகர்களுக்குப் பதம் செய்யப்படாத இவ்பொருட்களை இறக்குமதி செய்ய லைசென்சுகள் வழங்கப்படும்.

காஷ்மீர் போர்

புதுடில்லி, டிச 1

பூஞ்ச் பிரதேசத்திலுள்ள மலைப பிரதேசத்தை இந்தியதுருப்புகள் மீட்டுவிட்டன.

மன்னாராவுக்கருகே கிராமங்களைக் கொள்ளையடித்த எதிரிகளையும் விரடடியடித்தன. அக்கரை, பிம்பார் பிரதேசங்களில் இந்திய ராணுவ விமானங்கள் கண்காணிபபு செய்து வருகின்றன.

சுவிட்ஜர்லந்து ஸ்தானிகர்

பெர்லின், டிச. 2

அடுத்தவருடம் ஜனவரி 14-ம் தேதி முதல் இந்தியாவுடனும் பாகிஸ்தானுடனும் ஸ்தானிக உறவு ஏறபடுததிக் கொள்ளப் படுமென சுவிட்ஜர்லந்து சர்க்கார் நேற்றிரவு அறிவித்தனர் லண்டனிலுள்ள சுவிட்ஜர்லந்து ஸ்தானிகர் திரு பால்ரக்கர் இம்மாதம் இது சம்பந்தமாக இந்தியா சென்று இந்திய சர்க்காரையும் பாகிஸ்தான் சர்க்காரையும் கலந்து பேசுவார் சயாமுடனும் சுவிட்ஜர்லந்து ஸதானிக உறவு ஏற்படுத்திக் கொள்ளும்.

கூர்க்க ராணுவம்

லண்டன், டிச 1

இன்று காமன்ஸ் சபையில் பிரிட்டிஷ் சர்க்கார் பாதுகாப்பு மந்திரி திரு ஆல்பர்ட் அலெக்சான்டர் பின்வருமாறு தெரிவித்தார்:-

கூர்க்க அதிகாரிகளும் சோல்ஜர்களும் பிரிட்டன துராணுவததிலும இந்தியாவின் ராணுவததிலுமிருப்பார்கள். 8 கூர்க்க பட்டாளங்களை பிரிட்டன் வைத்துக்கொள்வதற்கு நேபாள சர்க்கார் இணங்கியிருக்கின்றனர். இது சம்பந்தமாக இந்தியா, பிரிட்டன, நேபாளம ஆகிய மூன்று சர்க்காரகளின் பிரதிநிதிகளும் நேபாளத் தலைநகரான சாட்மாண்டில் கூடி சமரசப் பேச்சுகள் நடத்தினார்கள். கூர்க்கர்கள ராணுவத்திற்குத் திரட்டும் காரிய லபம் இந்தியாவிலோ அல்லது நேபாளத்திலோ புதிதாக ஏற்படுததப் படும் வரை இப்பொழுதுள்ளதைப்போல கோரக்பூரிலும கும்மிலுமிருந்து வரும் இது சம்பந்தமாக நேபாள மகாராஜாவும், பண்டித நேருவும் காட்டிய நேசபான்மைக்கும் ஒத்துழைப்புக்கும் பிரிடடிஷ் சர்க்கார் நன்றிசெலுத்துகிறது.

ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்

காண்டர் [நியூயவுண்ட் லந்து], டிச. 1

நியூயார்க்கிலிருந்து இந்தியா திருமபும் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்டின விமானம் இன்று காலை இங்கு திரும்பிவரும்படி நேரிட்டது இன்றிரவு அது லிஸபன [போர்சுகல] மாடரிட் [ஸபெயின] கெய்ரோ (எகிப்து) வழியாக இந்தியாவுக்குப் புறப்பட்டுச் செல்லும்

தென்னாப்பிரிக்க இந்தியருக்கு செய்தி

நியூயார்க், டிச. 1

இந்தியாவுக்குப் புறப்பட்டுச் செல்லும்போது ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டித தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்திய மகளுக்கு கீழ்கண்ட செய்தி விடுத்தார்:-

தென்னாப்பிரிக்க இந்தியகளின் போராட்டமானது மனிதாபிமானமுள்ள மனிதர்களுக்காக உலகெங்கும் நடைபெற்றுவரும் போராட்டங்களில் ஒன்றாகும் மனிதனுக்கு மனிதன் நாடடுக்கு நாடு துவேஷங்கள் இருக்கும்வரை இப்போராட்டங்கள் தொடாந்து நடைபெறும் ஐக்கிய தேச சபையில் நமது கடசி மூலமாக இரண்டு பங்கு வோட்டு பலமின்றி தோற்று விடடதென்பது உண்மையே. ஆனால் அதனால் நாம் அதைரியபபடவேணடியதிலலை. நாம் நமது கடசியின் நியாயத்தை நிலைநாட்டுவதில் வெற்றிபெற்றுள்ளோம். நமக்கு விரோதமாக வோட்டுக் கொடுததவர்கள் தங்கள் நடத்தையின்பயன் எதிர்காலததில் எனனவாகுப என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவைகளின் கடமையாகும்.

நிறத துவேஷத்தைக் கண்டிப்பதற்குச் சாதகமான வோட்டுகள் பெறமுடியாதிருப்பது ஐக்கியதேச ஸதாபனத்திற்கு சுபசகுனமாகமாட்டாது.

பிரிட்டிஷ் மன்னர்-இந்தியா ஹை கமிஷனர் சந்திப்பு

லணடன, டிச. 1

நாளை பக்கிங்ஹாம் அரண்மனையில் இந்தியா ஹை கமிஷனர் திரு வி கே கிருஷ்ணமேனனை பிரிட்டிஷ் மன்னர் வரவேற்பார்.

திரு மேனனைப் புகழாதவர்கள் லண்டனில் இல்லை லண்டனிலுள்ள ஸதானிகர்வட்டாரததில அவர் ஒரு நட்சத்திரம் போலப் பிரகாசிக்கிறார். கிழக்கிந்திய சங்ககதில் சென்ற வாரம் திரு மேனன் பேசியபோது பாராளுமன்ற கன்சர்வேடிவ் அங்கததினர் திரு நிக்கல்சன் அவரை ஒரு பெரிய ராஜதந்திரி என்று புகழ்ந்தார். மாஜி இந்தியா மந்திரி லார்டு பெதிக் லாரன்ஸ் திரு மேனனின் பட்டவர்ததனமான பேச்சைப் பாராட்டினார். லண்டன் அப்சர்வர் பததிரிகை நேற்று திரு மேனனின் படத்தைப் பிரசுரித்து "இந்த மேதாவியை நாம இதுவரை லண்டனிலுள்ள பகா புரட்சிக்காரர் என்று எண்ணியிருந்தோம்" என்று எழுதியிருக்கிறது

இவர் சுய உழைப்பால் முன்னுக்கு வந்தவர். பாராளுமன்றததில் பிரகாசிக்கக்கூடிய பெரிய அரசியல் நிபுணர். பிரிட்டனை எதிர்த்துப் போராடிய இந்த ராஜதந்திரி சுதந்திர இந்தியாவுடன பிரிட்டனின் நடபை விரும்புகிறார்.

'நியூஸ்டேட்ஸமன் அண்ட் நேஷன' பத்திரிகையின் ஆசிரியர் அவரைப்பற்றி பின்வருமாறு எழுதுகிறார்:-

நான் லண்டன் பொருளாதார சாஸதிரக் கல்லூரியில் ஆசிரியராக இருந்தபோது திரு மேனன் எனது மாணவராக இருந்தார். இந்திய சுதந்திரத்திற்காக அவர் அருந்தியாகம செய்து இங்கிலாந்தில் போராடிக்கொண்டிருந்தார். இப்பொழுது ஹை கமிஷனர் பதவி வகிப்பது அவரது தியாகத்திற்கேற்ற பயனா? புதிய பதவியில் அவர் வெற்றிபடைந்துள்ளார். சுதந்திர இந்தியாவுக்கும பிரிட்டனுக்குமிடையே நேச பான்மையை அதிகரிக்கத்தக்க முறையில் அபிவிருத்தி செய்து வருகிறார்.

பெண்ணின் பரிதாப மரணம்

கணவன் மீது கொலைக் குற்றச்சாட்டு

கொழும்பு, டிச 2

அட்ரியன் பெரேரா என்பவர் மீது தமது மனைவி சோமாவதி அவிஸ் அலலது குசுமாவதி என்பவரைக் கத்தியால் குததி கொன்றதாக ஓர் வழக்குத் தொடரபபட்டுளளது.

சோமாவதி அட்ரியன் பெரேராவை நாலு வருடங்களின் முன் மணம் புரிந்ததாகவும், இரண்டு மாதங்களின் முன் தமது தந்தையார் வீடு சென்று அவர் வசித்து வந்ததாகவும் சொல்லப்பட்டது. சென்ற வெள்ளிக்கிழமை அவர் வீடடில் இருக்கும்போது தமது கணவர் ஓர் நீண்ட கததியோடு வருவதைக் கண்டாராம். பீதி அடைந்த அவர் தமது குழந்தையையும் தூகக்கொண்டு அயல் வீடடானறுக்கு ஓட்டம் எடுத்தாராம். கணவர் அவரிடம் இருந்த குழந்தையைப் பிடுங்கிகொண்டு பலதடவைகள் அவரை கததியால் குததினாராம்.

அட்ரியன் பெரேரா இப்போது தலை மறைவாகத் திரிவதாகத் தெரிகிறது.

சீதாதேவி இலங்கை வந்துசேரும்

இலங்கை அரசாங்கத்தின் மூன்றாவது டகோட்டா விமானம்

கொழும்பு, டிச. 2

இலங்கை அரசாங்ககதின் டகோடடா விமானங்களில் ஒன்றான சீதாதேவி டிசம்பர் 5-ம் தேதி இங்கு வந்துசேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

சில காலத்துக்கு இது 'டெக்கான் எயர்வேய்ஸாருக்குக் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. இது இலங்கை அரசாங்கத்துக்குச் சொந்தமான மூன்றாவது டகோட்டா விமானமாகும்.

பாராளுமன்றத்தில் அடிதடி

இருகட்சிகளின் அங்கத்தினர்கள் கை கலந்தனர்

புரட்சி நோக்கிச் செல்லும் பிரான்ஸின் அலங்கோல நிலைமை

பாரிஸ, டிச 1

பாரிஸ ரேடியோ நிலையங்களை இன்று பிரெஞ்சுத் துருபபுகள் ஆகிரமித்தன. சம்பள உயர்வு சமபந்தமாக தொழிலாளர் சம்மேளனததுடன் சர்க்கார் நடத்திய சமரசப் பேச்சு முறிந்ததும துருப்புகள் ரேடியோ நிலையங்களைகைப்பற்றின.

பிரெஞ்சு பாராளுமன்றம் இன்று பிற்பகல் சர்க்கார் கொணடுவந்த வேலைநிறுத்த எதிர்ப்பு மசோதாவின் மீது தொடாந்து விவாததததை நடததும், 20 லட்சம் தொழிலாளர் வேலை நிறுததம் தொடாந்து நடைபெறுகிறது. கமியூனிஸடுகளால் 14 தினங்களுக்கு முன் ஆரம்பிக்கபபட்ட இந்த வேலை நிறுத்தஇயக்கம் இன்னும நிறைறபாடிலலை. தொழிறசாலைகள், சுரஙகங்கள், போக்குவரத்துகள், துறைமுகங்கள் யாவும ஸதம்பிததுப்போய்க் கிடக்கின்றன ஒரு வாரகாலமாக தல்தியர்சுக்கும பிராங்சுக்கும் இடையே தந்திப் போக்குவரத்து நடைபெறவில்லை.

பிரஞ்சு பாராளுமன்றத்தின் மேல சபையில் வேலை நிறுத்த எதிர்ப்பு மசோதாவின் கீழ் சபையால் நிறைவேற்றப்பட்ட ஒரு பகுதி மீது விவாதம் நடைபெறுமபோது, சோஷியலிஸட் அங்கத்தினரும் கமியூனிஸட் அங்கத்தினரும் கைகல துகொண்டனர். ஒருவருக்கொருவர் அடிதடிகள நடைபெற்றன. இரண்டு மணி நேரம் விவாதம் நடைபெறறது அப்பொழுது கமியூனிஸட் அங்கத்தினர்கள் பிரதம மந்திரி ஷானை நோக்கி தாக்கிப் பேசினர். அவர் 1914-வது வருடததில் ஒரு ஜெர்மன் அதிகாரியாக இருந்தவரென்றும் பிரெஞ்சு குடியரசின் துரோகி என்றும குற்றஞ்சாட்டினார்கள் அப்பொழுததான் சோஷியலிஸட் டசாலடும் கமியூனிஸட் கயாண்டும கைகலந்தனர். இச் சச்சரவில் இரு கட்சி அங்கத்தினர்களும் சேர்ந்துகொண்டார்கள். போலிஸார் வந்து அமைதியை நிறுவினர் துருப்புகள் காவல் புரிகிறார்கள்.

இதன் காரணமாக சீழ் சபையில் விவாததததை தலைவர் நேற்று ஒத்திவைததார்.

வேலை நிறுததததால் ரயில்கள் ஓடவில்லையாதலால் பஸகளில ஏறிச் செல்ல ஜனக் கூட்டம் சச்சரவு செய்தபோது போலிஸார் தடிஅடிப் பிரயோகம் செய்தாகள பாரிஸ் மின்சாரமின்றி இருளில் மூழ்கிக் கிடக்கிறது சில ஜில்லாகளில குடி தண்ணீர் கிடைக்கவில்லை தொழிலாளர் சம்மேளனததின் கமியூனிஸ்ட் அங்கத்தினர்களை அதிகமாக உடைய நிர்வாகக் கமிட்டி தொழிலாளர்கள் மேலும் நடவடிக்கை எடுக்கவேணடுமென்று வேணடுகோள் விடுத்திருக்கிறது. இதனால் கமியூனிஸடுகள் புரட்சிகு ஆயததம செய்கிறார்கள் என்று சோஷியலிஸட் பத்திரிகை எழுதுகிறது.

நேற்று தென் பிரான்ஸில் தொழிலாளர்கள் பிரைவ்ரியில் வேஸடேஷனைக் கைப்பற்றினர் போலிஸார் பின்வாங்கும் படியாயிற்று.

கிராமச் சங்கக் கூட்டங்களுக்கு சமூகமளிக்காமை

அங்கததினர் மீது நடவடிக்கை எடுக்க முயற்சி

கொழும்பு, டிச 2

நீண்டகாலமாக கிராமச் சங்கக் கூட்டங்களுக்குச் சமூகமளிக்காமலே பலர் அதில் தொடாந்து பதவிவகிப்பதுபற்றி தற்காலிக ஸதல ஸதாபனக் கமிஷனருக்கு ஏராளமான புகார்கள் வந்துள்ளன

மூன்று கூட்டங்களுக்குத் தொடர்ந்து சமூகமளிக்காவிட்டால் பதவியில் இருந்து நீக்கபடலாம் என்ற சட்டம் சரியாக அமுல் நடத்தப்பட வில்லை.

இது போன்ற உப விதிகளை ஜரூராக அமுல் நடத்தும்படி தற்காலிககமிஷனர்களுக்கு வேண்டுகோள் விடுததுள்ளார்.

இளைப்பாறும் உத்தியோகஸ் தருக்குக் கௌரவ விருந்து

யாழ்ப்பாணம், டிச. 1

யாழ்ப்பாணக் கச்சேரியில் இரண்டாவது முதலியார் பதவியை வகித்த திரு ஸீ. முத்துத் தம்பி தமது 35 வருட கால அரசாங்க சேவையிற் பின் இளைப்பாறியுள்ளார் இது சமபந்தமாக யாழ்ப்பாணவாடி வீட்டில அவருக்கு ஓர் விருந்துபசாரம் நடத்தப்பட்டது

[ந-நி]

கணவனைக் கொல்ல மனைவி உடந்தையா?

கொட்டாஞ்சேனையில் நடந்த கோரக் கொலை

சமயற்காரி சாட்சியம்

கொழும்பு, டிச. 2

கொட்டாஞ்சேனைக் காலேஜ் வீதியைச் சேர்ந்த டி. எஸ். டி. வில்வா செனிவரதனு கொலை செய்யப்பட்டது சமபந்தமான வழக்கு நேற்று கொழும்பு மஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டது. இவ்வழக்கில் கலஞ்சென்றவரின மனைவி பீடரில் மவுப் செனிவரதனும், கே. ஏ. தர்மசேனவும், குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

சர்க்கார் தரப்பில் மொத்தம் 54 பேர் விசாரிக்கப்பட இருக்கிறார்கள்.

இச்சம்பவம் சம்பந்தமாக செனிவரதனு வீட்டில் வேலைக்காரியாக இருந்த 50 வயது அலீஸ நோனா பின் வருமாறு குறிப்பிட்டார்:-

'சம்பவம் நடைபெற்ற ஒரு மாதத்தின் முன் நான் செனிவரதனு வீட்டில் வேலைக்கமர்ந்தேன். அவர்கள் வசிகத வீட்டில இன்னோர் பறவகிக் குடும்பமும இருந்தது. திரு செனிவரதனுவுக்கு மனைவியும் இரு குழந்தைகளும் இருந்தன. திரு செனிவரதனுவுக்கு எவ்வித வேலையும் இருககவில்லை. ஸ்ரீமதி செனிவரதனு சிறிது நட்களாக பாடம சொலலிக் கொடுக்க ஆரமபித்தார். பறவகிக் குடும்பததைச் சேர்ந்தவர்கள் காலை எட்டு மணிக்கு வெளிக்கிழம்பி விடுவார்கள். ஸ்ரீமதி செனிவரதனுவும் இரு குழந்தைகளும் காலை ஆகாரததின் பின் பள்ளிக்குப் போய் விடுவார்கள். எட்டரைமணி தொடக்கம் நானும் திரு செனிவரதனுவுமே வீடடில் பதினொரு மணிவரை இருப்போம். கொலை நிகழ்ந்ததற்கு முதல் தினம் நான் எஜமானி ஸ்ரீமதி செனிவரதனுவுடன் நுகயகொடைக்கு அவரது தாயார் வீட்டிற்குச்சென்றேன். அதன்பின்பு நாங்கள் இருவரும் ஒரு வைத்திய சாலைக்குச் சென்றோம். அப்போது அங்கிருந்த பாஸ் (தர்மசேன) 'நான் நேற்று வீட்டிற்கு வந்தேன். குழந்தை வீட்டில் இருந்ததால் அவரை என்னால் ஒன்றும் செய்யமுடியவில்லை' என்று கூறிவிட்டு என்னைக் குறிப்பிட்டு நான் நம்பிகையான பேர்வழியா என்று கேட்டார். எஜமானி ஆம் என்று கூறினார்.

பின்னர் பாஸ் முதலாவது எதிரி ஒரு மேசையைத் திறந்து ஒரு தடடையான பொருளைக் காட்டி "இதனால் சுட்டால் சப்தமதிகமாயக் கேட்கும். வாளால் தான் வெட்டவேணடும்" எனச் சொன்னார். அடுதத நாட்காலை அவர் எங்கள் வீட்டுக்கு வருவதாகவும் தெரிவித்தார். பினனர் நாங்கள் வீடு வந்தோம்.

காலையில் ஸ்ரீமதி செனிவரதனு பாலை வந்ததும் என்னை மார்க்கெட்டுக்குச் செல்லும்படி கூறி என்னிடம் 1 ரூபாய் கொடுததார். அதன் பின் அவர் போய் விட்டார். பாஸ் சற்றுக் கழித்து வீட்டுக்குவந்து எஜமானர் எங்கே என்று கேட்டார். நான் அவர் மார்க்கெட்டுக்குப் போய்விட்டதாகத்தெரிவிததேன். என்னையும் மார்க்கெட்டுக்குப் போகுமபடி வற்புறுததினார். நான் முதலில் மறுததேன். ஆனால் பின்னால் ஒப்புக்கொண்டேன். திரும்புகையில் போலிஸ்டேஷனில் எஜமானியைக் கண்டேன். என்னிடம் 'அம்மே எஜமானரை யாரோ கொன்றுவிடடார்கள்" என அவர் கூறினார்.

பின்னர் வீடுபோனதும் திரு. செனிவரதனு சாப்பாட்டு மேஜைக் கடியில் ரத்தவெள்ளத்தில கிடந்தார். மேசையில் அவர் கொண்டுவந்த சமயல் சாமான்கள் இருந்தன. அத்துடன் பாஸ் கொண்டுவந்த கொட்டுக் குழையும் இருந்தது. எனக்கு எல்லா விஷயமும்தெரிந்திருந்தது. ஆனால் எஜமானி ஒன்றையும் சொல்ல வேணடாம் என்று என்னைக் கேட்டுக் கொண்டார்.

விசாரணை டிசம்பர் 4-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகங்கெடுக்கும் சுத்த அபத்தத் திட்டம்

குழந்தைகளின் வயிற்றில் அடிக்கலாமா?

பெண் அலங்காரத்திற்கு மண் விழுந்தது!

ஸ்ரீதனத்தின் மீது கொழுத்தவரி விதிக்க மதி எங்கே போச்சு என்கிறார் புத்திரனைப் பெற்ற ஓர் தந்தை

புதிய வரிகளால் வீசும் புயல் காற்று

ஒரே இரவில் ஒழிந்துகொண்டசாமான்கள்; 'விர்' என்று ஏறிய விலைவாசிகள்

கொழும்பு, டிச. 2

ஆடம்பரப் பொருட்களின் இறக்குமதி வரிகளும் லாப வரி, பூதல்வரி, ஷேர்களின் ஸ்டாம்புவரி முதலியவரிகளும் தேங்காய் திருவல் ஏற்றுமதி வரியும் அதிகரிக்கப்பட்டிருப்பதாக நேற்று பாராளுமன்றத்தில் நிதி மந்திரி விடுத்த அறிக்கையின் பயனாக இன்று வியாபார உலகில் புயல் காற்று அடிக்கத் தொடங்கிவிட்டது.

புறக்கோட்டையிலுள்ள வியாபார ஸ்தலங்களில் ஒரே இரவுக்குள் விலைவாசிகள் 'விர்' என்று ஏறிவிட்டன கொழும்பில் கிழக்குப் பகுதிகளிலுள்ள சீமைச் சாராயக் கடைகள் மதுபான வகையறாக்களில் விலைகள் ஏறிவிட்டன. சில கடைகள் வாடிக்கைகாரர்களுக்கு கூட மதுபான வகையறாக்களை விற்காமல் முடக்கிக் கொண்டன.

சிக்கரட் ஒன்றுக்கு ஒரு சதம் அதிகமாகக் கூட்டி விற்கப்பட்டன.

புதிய வரிகள் கொடுக்காமல் ஏற்கனவே வாங்கிவைக்கப்பட்டிருந்த சாமான்களின் மீது அதிகவிலையைச் சுமத்தி லாபம் சம்பாதிக்கும் தருணத்தை வியாபாரிகள் நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள்.

நேற்றைய விலையைவிட ஆப்பிள் விலையும் கிராட்சைப்பழ விலையும் ஒன்றரை மடங்கு அதிகரித்துவிட்டது. வெண்ணெய் விலையும் சீஸ் விலையும் ஏறிக்கொண்டன. குடித்தனப் பெண்களும் தொழிலாளர்களும் இப்பொருட்களின் விலையேற்றங்கண்டு வருத்தமுறுகிறார்கள். குழந்தைகளின் உபயோகத்திற்கு உதவும் இப்பொருட்கள்மீதுவிதிக்கப்பட்ட இறக்குமதி வரி நியாயமான தலைவென்று பலர் கருதுகின்றனர். வாசனைத்திரவியங்கள், முகப் பவுடர், ஸ்னோ, சோப் முதலிய பொருட்கள் சாதாரண மக்களுக்கும் தினசரித் தேவையாகி விட்டதால் இவைகளின் விலை உயர்வு கண்டு முக்கியமாகப் பெண்ணினம் ஆத்திரப்படுகிறது. மந்திரியின் வரவு செலவுத் திட்டத்தை சுகங்கெடுக்கும் வரவு செலவுத் திட்டமென்று சொல்லுகிறார்கள்.

பல பெண் குழந்தைகளைப் பெற்ற ஒரு தகப்பனார் "இந்த மந்திரி அவ்வளவு கெட்டிக்கார மந்திரி இல்லையே! கலியாண ஸ்ரீதனங்கள் மீது வரி விதித்தால் ஏராளமான பணம் சர்க்காருக்குக் கிடைக்கும் என்ற முக்கியமான விஷயத்தை மறந்து போய்விட்டாரே" என்றார்.

ஐரோப்பிய தோட்ட முதலாளிகள்

பாராளுமன்றத்தில் இடதுசாரித தலைவர் தோட்டங்கள் முதலானவைகளை சர்க்கார் எடுத்து நடத்தவேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டு வந்திருப்பதன் பயனாக அநேக ஐரோப்பிய தோட்டமுதலாளிகள் தங்களது தோட்டங்களை விற்றுவிடுவதற்கு ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிகிறது.

பெரிய தோட்ட முதலாளிகளிடமிருந்து வரிகளைப் பெறுவதற்கு வருமான வரி இலாக்கா கஷ்டப்படுவதாகத் தெரிகிறது.

ஒரு பெரிய தோட்ட முதலாளி தான் வருமான வரி இலாகாவுக்குக் கொடுக்கவேண்டிய 3 லட்ச ரூபாய் வரி பாக்கிக்குப் பதிலாக தனது தோட்டங்களை சர்க்கார் விலைக்கு வாங்கிக்கொண்டு, வரி பாக்கியை எடுத்துக்கொண்டு மீதப் பணத்தைத் தன்னிடம் கொடுத்துவிடும்படி தெரிவித்திருக்கிறாராம்.

அரசாங்கம் இந்தத் தோட்டங்களை வாங்குவதாயிருந்தால் வரி பாக்கியைக் கழித்துக்கொள்ளும்படி வருமான வரி இலாகா அதிகாரிகள் நிலக் கமிஷனருக்கு தெரிவித்திருப்பதாகவும் தெரிகிறது. ஆனால் நில சுவீகரிப்பு சட்டப்படி நிலம் வாங்க அரசாங்கத்திடம் ஒதுக்கப்பட்ட பணம் போதிய அளவில் இல்லையென்றும் தெரியவருகிறது.

ஹட்டன் நகரசபைத் தேர்தல் முடிவுகள்

ஹட்டன், டிச. 2

ஹட்டன், டிக்கோயா நகரசபைத் தேர்தல் முடிவுகள் பின்வருமாறு:—

1-ம் வட்டாரம்:-ஏ. குவின்ஸ் டி சொய்சா-235; ஏ. எச். டி. சில்வா-55; கே. ஆர். சம்சுதீன்-46; எல். ஏ. டி. சில்வா-4; பழுதடைந்தவை-3

2-ம் வட்டாரம்:-அந்தோனி ஜே. எம். டி. சில்வா (தற்போதைய நகரசபைத்தலைவர்)-121; ஜே. எம் டி. சிமித்-87; பழுதடைந்தது-1.

3-ம் வட்டாரம்:-பி. எஸ். பெண்டிஸ (தற்போதைய அங்கத்தினர்)-121; ஜே. ஸி. ராஜரத்னம்-91; வி. ஜி எம். சென்விரதனு-29 பழுதடைந்தவை-2.

4-ம் வட்டாரம்:-தாஜுதீன் ஜயினுல் அப்தீன்-275; வி. வி. மதேவன்-9. பழுதடைந்தவை-4.

5-ம் வட்டாரம்:-ஏ. பி. பெண்டிஸ (தற்போதைய நகரசபையின் உப தலைவர்)-133 எம். இளையதம்பி-52; பழுதடைந்தவை-3

6-ம் வட்டாரம்:-ஓ. டொன் அட்டென் (தற்போதைய அங்கத்தினர்)-182; என். பொன்னம்பலம்-154; பழுதடைந்தவை-2

7-ம் வட்டாரம்:-ஓ. டொன் வில்பிரெட்-122; என் வெற்றிவேலு-66; பழுதடைந்தவை-3

வெள்ளவத்தையில் கார் விபத்து

ஒருவர் மாண்டார்

கொழும்பு, டிச. 2

வெள்ளவத்தைப் போலிஸ் பகுதியில் ஆறுமுகம் சின்னத்தம்பி என்பவர் நேற்று மாலை ஒரு காரினால் அடிக்கப்பட்டார் நவாலியைச் சேர்ந்த இவர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இன்று காலை அவர் காலமடைந்துவிட்டதாகச் செய்தி கிடைத்துள்ளது.

அவரைத் தட்டிவிட்ட கார் கால்பேஸ் ஹோட்டலில் கண்டுபிடிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அதன் சொந்தக்காரர் ஹவலக் வீதியைச் சேர்ந்த இ. எச். பெரஞ்ஜெர் என்று கூறப்படுகிறது. (ந-நி)

ஆசிரியருக்குக் கடிதம்

"நிறுத்து! நிறுத்திட்டேன்!"

ஐயா!

திரிகோணமலையில் 23-11-47ல் நடந்த கோருஜியின் ஜெயந்தியைக்கொண்டாட்டத்திலாவது கற்குடாப் பிரதிநிதியை பேசவிடாது தடுத்தது மிகவும் துக்கந்தான். பாவம் இவர் பதவிக்காக ஆசைப்பட்டு தன் நாட்டு மக்களுக்குச் செய்த துரோகத்தைத் தானே உணர்ந்து இந்த பகிரங்கக் கூட்டத்தைச் சான்றாக வைத்துக்கொண்டு இதில் வந்து மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று நினைத்து வந்தாரோ என்னவோ யார் அறிவார்? ஆனால் அவரைப் பேசவிட்டு அவர் என்னத்தைப்பற்றி பேசுகிறார் என்பதை அறிந்த பின்பு 'நிறுத்து' என்னும் சுலோகத்தை உச்சரித்திருக்க வேண்டும்! ஒரு மனிதன் தன்னுடைய பதவி மோகத்தால் செய்த துரோகத்துக்காக பகிரங்க மேடையில் வைத்து 'நிறுத்து' என்று சொன்னதும் 'நிறுத்தி விட்டேன்' என்று எழுந்து போய் விடுவது எலிகளுக்கு பூனை எப்படி உபதேசம் செய்ததோ அப்படி உபதேசம் செய்யத்தான் இவர் வந்திருக்கிறார்! ஆனால் 'நிறுத்து' என்னும் மந்திரத்தினிடம் இவருடைய பருப்பு வேகவில்லை பாவம் ஒரு பெரிய மனுஷனை இப்படி அவமானப்படுத்தலாமா?

இங்ஙனம்
யோ. எலியாஸ்
வெள்ளமணல் 27-11-47

தேசிய சேமிப்பு இயக்கம்

ஆனை இறவு, நவ. 25

பளைத் தமிழ் பாடசாலை மண்டபத்தில் வடமாகாணதிபதி திரு. பி. ஜே. ஹட்சன் அவர்களின் அவைத் தலைமையின் கீழ் தேசிய சேமிப்பு இயக்கக் கூட்டம் ஆரம்பமாகியது. வடமாகாண தே சே. இ அமைப்பாளர் முகாந்திரம் திரு. தியாகராஜா; யாழ்ப்பாணக் கச்சேரிடமணியகாரர் திரு. விஜயித் தமபி அவர்களும்; இப் பகுதி ஆசிரியர் பலரும்; கிராமத் தலைமைக்காரராதியோரும், கிராமவாசிகள் பலரும், கிராமப் புனருத்தாரண உதவியோகஸ்தரு எஸ். குமாரவேலு அவர்களும் சமுகமாகவிருந்தனர்.

இப் பகுதிக் காரியாதிகாரிகள் திரு எஸ். ஸ்ரீநிவாசன் தேசிய சேமிப்பு இயக்கத்தினின்றியமையாமையை படிப்படியாகக்கொண்டு, பல குறிப்புகளைக் கூறினார்

இப் பகுதி தேசிய சேமிப்பு இயக்கக் கௌரவ காரியதரிசி திரு. ஏ. சி. துரைராசா போதகரவர்கள், தேசிய சேமிப்பு இயக்கத்தைக் கிராம வாசிகட்கு விளக்கமாகக் கூறும்படி வேண்டிக்கொண்டனர்.

குறித்த பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. ஏ. பி. சின்னத்துரையவர்கள்; தமது மாணவர் இதுவரை ரூ 1500 வரை; தபாற்கந்தோர் சேமிதி வங்கி மூலஞ் சேமித்ததைப் பற்றியும்; மாணவர் இவ்வியக்கத்திலீடுபட்டுழைக்க வல்ல குறிப்புகளைத் தலைவரவர்கள் கூறுதல் வேண்டுமென்று வேண்டுதல் மூலம் தமது குறிப்புரைகளைக் கூறினர்.

ஆனை இறவு அரசினர் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு எஸ். கந்தையா அவர்கள் தமது பாடசாலை தேசிய சேமிப்பு இயக்கத்தில் சென்ற ஆண்டு மூன்று தவணைகளிலும் முதலாம் இடத்தைப் பெற்றதைப் பற்றியும்; இலக்கு ரூ 7500 ஆக இருக்கவேண்டுமெனவும் கூறினர்.

இளங் குற்றவாளி தப்பி ஓடினான்

கொழும்பு, டிச 2

எல்பிட்டியாவில உள்ள நவடகலை பைச்சேர்ந்த பி சேமன் என்னும் இளைஞன் வக்துபிட்டிவெலயில் உள்ள இளங் குற்றவாளிகளின் சீர் திருத்தச் சாலையில் இருந்து தப்பி ஓடிவிட்டான்.

குறித்த சிறுவன் 1946-வருடம் பலப்பிட்டிய நீதிபதியாலவுக் குற்றத்திற்காகத தண்டனை விதிக்கப்பட்டவனாவான்,

யூதர்கள் ஆனந்தம், அராபியர்கள் ஆத்திரம்

மேனாட்டாருக்கு விரோதமாக 7 அராபிய நாடுகளில் ஆர்ப்பாட்டங்கள்

ஐக்கிய தேச ஐவர் கமிஷன் பற்றி தர்மகர்த்தா கமிட்டியில் அமெரிக்க தீர்மானம்

கெய்ரோ, டிச. 1

பாலஸதீனத்தைப் பிரிக்க ஐக்கிய தேச ஸதாபனம் செய்துள்ள தீர்மானத்தைப்பற்றி ஆலோசிக்க 7 நாடுகள் அங்கம் வகிக்கும் அராபிய லீகின் கவுன்ஸில் கூட்டம் டிசம்பர் 12-ந் தேதி நடைபெறுமென்று, அராபிய லீக் காரியதரிசி அசாப் பாஷா இன்று அறிக்கை விடுத்தார். அசாம் பாஷா சிரியா, ஈராக், லெபானன், எகிப்து பிரதம மந்திரிகளுடன் டெலிபோனில் பேசி இம் முடிவு செய்தார். இந்த நான்கு நாடுகளுடன் சவூதி அரேபியா, டிரான்ஸ் ஜோர்டன், யேமன் நாடுகளும் அராபிய லீகில் அங்கம் வகிக்கின்றன. மேல்நாட்டாருக்கு விரோதமாகவும் ஐக்கிய தேச ஸதாபனத்திற்கு விரோதமாக அராபிய நாடுகளெங்கும் ஆத்திரமேற்பட்டு ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன.

இன்று கெய்ரோ நகரிலுள்ள சர்வ கலாசாலை மாணவர்கள் "பாலஸதீனம் அராபியர்களுக்கே" 'ஐக்கிய தேச ஸதாபனம் வீழ்க" என்று கோஷித்துக்கொண்டும் வீதிகள் வழியாக ஆர்ப்பாட்டங்கள் செய்துகொண்டும் சென்றார்கள். பிரிட்டிஷ் வர்த்தக ஸ்தலங்கள் வழியாகச் செல்லும் போது "இங்கிலாந்து வீழ்க" என்று கோஷித்தார்கள்.

போலிசார் பந்தோபஸ்து செய்துகொண்டு சென்றார்கள்.

சிரியாவில் பெய்ரூத் நகரில் சுமார் 10 ஆயிரம் மாணவர்கள் அராபியக் கொடிகளையும் விளம்பரங்களையும் தாங்கிக்கொண்டும் அமெரிக்காவுக்கு விரோதமான கோஷங்கள் செய்துகொண்டும் வீதிகள் வழியாக ஆர்ப்பாட்டங்களை செய்துகொண்டும சென்றனர். வழியில் அமெரிக்க விளம்பர காரியாலயக் கட்டிடத்தின் மீதும் பிரஞ்சு ஸதானிகக் காரியாலயக் கட்டிடத்தின் மீதும் கற்களைஎறிந்தனர்.

ஜெரூசலத்தில் அராபியர்கள் ஜாபா கோட்டை வாசலிலிருந்து டமஸ்கஸ் கோட்டை வாசல் வரை வீதிகள் வழியாக ஆர்ப்பாட்டம் நடத்தினர் "அமெரிக்கா வீழ்க!" "ஐக்கிய தேச ஸதாபனம் வீழ்க" என்று கோஷித்துக்கொண்டு சென்றனர். டமஸ்கஸ் கோட்டை வாசலில் ஒரு யூத வாலிபர் கழுத்தில் இருந்த டவை சுடப்பட்டார்.

யூத அரசாங்கம் ஏற்படுத்துவது சம்பந்தமாக நிர்வாக விஷயங்களைப்பற்றி ஆலோசிக்க இன்று பாலஸ்தீன ஹை கமிஷனர் ஜெனரல் சர் ஆலன் கன்னிங்ஹாம் யூதர் சபைத் தலைவரைச் சந்தித்துப் பேசினார்.

புதிய யூத அரசாங்கம் ஏற்படுவதுபற்றி உலக யூதர்களுக்கு ரேடியோ செய்ய பிரகடனம் செய்ய பிரகடனங்கள் தயாரிப்பதற்காக யூதர் சபை நிர்வாகக் கமிட்டி இன்று கூடுகிறது.

பிரிட்டன் வெளியேறும் வரை அராபியர்கள் தொல்லை கொடுக்க மாட்டார்கள் என்று பிரிட்டன் கருதுகிறது. இதை ஹை கமிஷனர் அராபிய மேல் கமிட்டி காரியதரிசிக்கு அறிவித்துருக்கிறார்.

யூதர்களுக்கு ஒரு நாடு கிடைத்துவிட்டதென்று யூதர்கள் ஆனந்தக் கொண்டாட்டம் கொண்டாடுகிறார்கள்.

பிரிட்டிஷ் யூதர் தலைவர் அறிக்கை

லண்டன், டிச 1

பிரிட்டிஷ் யூதர் சங்கத் தலைவர் டாக்டர் லீஸ்மன் பின்வருமாறு தெரிவித்தார்:—

யூதர்கள் பாலஸதீனத்தில் புதிதாக ஏற்படும் யூதர் நாட்டைப் பாதுகாக்க ஆயத்தம் செய்கிறார்கள். இப்பொழுது அவர்களிடம் 60 ஆயிரம் யூத வீரர்களிருக்கிறார்கள். இரண்டு மூன்று வருடங்களில் ஒரு லட்சம் யூத அகதிகள் குடியேறுவார்கள்.

ஐக்கிய தேச கமிஷன்

நியூயார்க், டிச. 2

5 நாடுகளின் பாலஸதீன கமிஷனை உடனே நிறுவ அமெரிக்கா ஐக்கிய தேச தர்மகர்த்தா கமிட்டியில் கொண்டுவந்த தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது. தர்மகர்த்தா கமிட்டிக் கூட்டம் முடிந்ததும் ஐவர் கமிஷன் கூடி பாலஸதீன இடைக்கால நிர்வாக சம்பந்தமான திட்டத்தை தயாரித்து கமிட்டிக்கு சமர்ப்பிக்கும்.

இந்தியர் குடியேற்றக் கட்டுப்பாடு அதிகாரி

சென்னையில் ஒரு அதிகாரி நியமனம்

புதுடில்லி, நவ 30

டில்லியிலுள்ள இந்திய சர்க்காரின், வெளி நாடுகளில் இந்தியர் குடியேறுவதைக் கட்டுபடுத்தும் பிரதம கட்டுப்பாடு அதிகாரிக்கு உதவியாக சென்னையிலும் ஒரு கட்டுப்பாட்டு அதிகாரியை நியமிக்க இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள். இந்தியா வெளி நாடுகளில் குடியேறுவதுபற்றியுள்ள கட்டுப்பாடுச் சட்டம் சென்னை மாகாணத்தில் அமுல் செய்யப்படுவதை இவர் கவனிக்க வேண்டும். சென்னை மாகாணத்திலுள்ள எலா புரொடக்டர்களின் வேலைகளையும் காரியாலயங்களையும் இவர் மேற்பார்வை செய்யவேண்டும்

இந்தியர் குடியேற்றக் கட்டுப்பாடு சம்பந்தமான அலுவல்களை 1941-ம் வருடம் மத்திய சர்க்காரே தங்கள் நிர்வாகத்தில் எடுத்துக்கொண்டனர் அவர்கள் குடியேறும் நாடுகளில் யுத்தத்தற்குப் பின் பல மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதை முன்னிட்டு பல பிரச்னைகள் கிளம்பியிருக்கின்றன

ஆகவே இந்தியாவிலுள்ள எல்லாத் துறைமுகங்கள் மூலமாகவும் இந்தியர்கள் வெளி நாடுகளில் சென்று குடியேறுவது சம்பந்தமான அலுவலகளை இந்திய சர்க்கார் ஒரே ரீதியான முறையில் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது.

தமிழறிஞரின் மரணம்

யாழ்ப்பாணம், டிச. 1

சென்ற வெள்ளிகிழமை 4-30 மணி அளவில் யாழப்பாணத்தின் பிரபல தமிழறிஞரில் ஒருவரான சங்கை மகா. எஸ். முருகேசு வட்டுகோட்டையில உள்ள தமது இல்லத்தில் காலமடைந்தார்.

77 வயது நிரம்பிய அவர் சென்னைச் சர்வகலாசாலையின் பட்டதாரிகளில் ஒருவராவர். வேதாந்த சித்தாந்த அறிவிலே தலை சிறந்து விளங்கிய அவர் இலங்கையில் மட்டுமல்ல தென்னிந்தியாவிலும கௌரவிக்கப்படடுவந்தார்.

ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலைப் பேராசிரியர் சங்கை டாக்டர் பார்க்குவார் இந்துமத சம்பந்தமாக ஓர் நூல் எழுதுவதற்கு முன வந்தபோது இவருடைய உதவியைக்கோரி இருந்ததாகத் தெரிகிறது. தமிழ் நூலிலே சித்தாந்த சம்பந்தமாக ஓர் நூலொன்றும் அவர் எழுதியுள்ளார். ஆங்கிலத்தில் இந்துமத தத்துவப்பிரசுரங்கள் வெளியிட்டிருப்பதுடன் 29 வருடகாலமாக ஒரு மெதடிஸ்ட் போதகராகவும் விளங்கினார்.

வழக்கறிஞர் எம். பாலசுந்தரம், எம். கனகசுந்தரம், எம். ராஜசுந்தரம், கோப்பாய் பெண்கள் ஆசிரியப் பயிற்சிப் பாடசாலைத் தலைவி செல்வி ஞானம் முருகேசு, பொன்னம்மா முருகேசு ஆகியோர் இவரது பிள்ளைகளாவர். உதவிக் கல்வி அதிகாரி கே. எஸ். அருணந்தி இவரது மருமகராவர் [ந-நி]

கண்டித் தேர்தல் ஆட்சேபனை

ஒத்திவைப்புக்கு ரூ 2500 நஷ்டஈடு

கொழும்பு, டிச. 2

கைத்தொழில் மந்திரி திரு. ஜியாஸ்ஜ. ஈ. டி. சில்வாவின் தேர்தலை ஆட்சேபித்து அவருடன் போட்டியிட்ட திரு. டி. பி. இலங்கரத்னாவாலும், திரு ஜோனவீரசேகராவாலும் சமர்ப்பிககப்பட்டுள்ள மனுக்கள் டிசம்பர் 15-ம் தேதி விசாரணைக்கெடுத்துக் கொள்ளப் படும்.

வெள்ளிக்கிழமை நடைபெற இருந்த இவ் வசாரணை மந்திரியாரின் தேக நிலைமை காரணமாக ஒத்திபோடப்பட்டது. இந்த ஒத்திவைப்புக்கு நஷ்டஈடாக ரூபாய் 2500 மனுதாரர்களுக்கு எதிரியால் கொழுக்கப்படவேண்டுமென்று முடிவாகி உள்ளது. இது இரு மனுகாரர்களுக்கும் 1250 ரூபாய் வீதம் வழங்கப்படும்.

எலெக்ஷன் போட்டி

எம்மால் வெளியிடப்பட்டிருந்த டி போட்டியில் பரிசு பெற்றிருந்து இதுவரையாருக்காயினுஞ் சரியான விடை கிடைத்திருக்காவிடின் அவர்கள் தயவு செய்து 15-12-47க்கு முன் எமக்கு அறிவித்தால் அதற்கேற்ற ஒழுங்குகள் செய்யப்படும்.

டி போட்டிக்கும் சாரதா புத்தகசாலையாருக்கும் எவ்வித தொடர்புமின்மையால் எழுதும் கடிதங்களை "மானேஜர் எலெக்ஷன் போட்டி" சாரதா புக்டிப்போ யாழ்ப்பாணம் என்ற விலாசமிட்டு எழுதவேண்டும்.

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரை அணுகத் தேவையில்லை!

புதிய மதுரமான ஆப்பிள் பழங்கள் கலிபோனியாவிலும், ஆஸ்திரேலியாவிலுமிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

உங்களுக்கு தேவையானவற்றை எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

கப்பல்கள் வந்தவுடன் துறையிலிருந்து நேரே எங்கள் பந்தோபஸ்தான அறைகளில் அவைகளின் புதுமை கெடாது இருக்கும்படி சேகரிக்கப்படுகின்றது.

ஜி. ஸி. ரூேச் அன் கோ.,
மலிபான் தெரு,
போன்: 2784 கொழும்பு 11 (தபாற்பெட்டி 243)

அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!

மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது
இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்

மேனகா மார்க் லொசிஞ்சர்களே!

மேனகா மார்க் லொசிஞ்சர்கள் ஒவ்வொன்றிலும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும் இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது. அத்துடன் மனதிற்கு நல்மணமும், நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திரமுறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து; விற்கப்படுகின்றது.

மேனகா மார்க் லொசிஞ்சர்

எல்லா முக்கியவியாபாரிகளிடமும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,
71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.
Telegram: "SWEETS" Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸதர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, " "
மனோன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாக்ஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
N. B. அந்திரிஸ சில்வா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுததர் அன் கோ, வத்துகாமம்
A. S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K சிவகுநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடம்பரப் பொருட்கள் மீது அதிகமான வரிகள்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தயாரிப்பு முறையிலேயே தங்கியிருக்கிறது. வருமானத்தை அதிகரிக்க இன்னும் சரியான வழிவகைகள் வகுக்கப்பட வேண்டும்.

தனிப்பட்ட முயற்சியிலீடுபட்டவர்களின் பண அமைப்புடன் அரசாங்கத்தின் பண அமைப்பை ஒப்பிட்டு நோக்கின் அரசாங்கத்தின் பண அமைப்பு அற்பமானதையே காட்டும்.

அதிகரித்த செலவுகள்

எங்களது செலவு தொகை 43 கோடியே 55 லட்சம் ரூபாய் ஆகிறது. கடந்த சில வருடங்களில் வாழ்க்கைச் செலவு அதிகரித்துவிட்டது. சம்.ளத திட்டத்தின்படி செலவு 20 கோடியே 80 லட்சத்துக்கு உயர்ந்துவிட்டது. இது வருவாயில் 48 சத விகிதத்தை விழுங்கிவிட்டது.

சமூக சேவைக்கு செலவு

சமூக சேவை முதலியவற்றுக்கு ஆக 17 சத விகித வருமானமே ஒதுக்கப்பட்டுள்ளது. சமூகத்தையும் ஒழுங்கையும் நிர்வகிப்பதற்கு வருமானத்தில் 15 சத விகிதம் செலவாகிறது.

கடன் நிதி செலவு

கடன் நிதியிலிருந்து 10 கோடியே 60 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. சுகாதாரத்துக்கு 1 கோடியே 60 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

உணவுப் பொருள் செலவு

உணவுப் பொருள்களுக்கு 3 கோடியே 50 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட வேண்டியிருக்கிறது. இப்பொழுது ஒரு கொத்து அரிசிக்கு 62 சத வீதம் அரசாங்கம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

உற்பத்தி நாடுகள் நிலை

ஆஸ்திரேலியாவிலிருந்து அதிக விலையில பால் உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. உலகம் முழுமையிலும் அத்தியாவசியமான உணவுப் பொருள்கள் தேவை அதிகமாக இருப்பதை முன்னிட்டு உற்பத்தி நாடுகள் இந்தத் தருணத்தை உபயோகிக்கின்றன. வாழ்க்கைச் செலவு அதிகரித்துவிட்டது. பொருளுகளின் விலைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கின்றது.

உணவுப் பொருள்களுக்கு அரசாங்க பண உதவி

இன்று அரசாங்கம் அரிசிக்கு டன்னுக்கு 600 ரூபா வீதமும் மாவுக்கு டன்னுக்கு ரூபா 425 வீதமும் கொடுத்து வருகிறது. வாழ்க்கைச் செலவைக் குறைத்து கட்டுப்படுத்தும் நோக்குடன இவற்றை மக்களுக்கு மிகவும் குறைந்த விலையில அரசாங்கம் விற்பனை செய்கிறது.

வாழ்க்கைச் செலவு அதிகம்

உலகிலுள்ள நாடுகளின் வாழ்க்கைச் செலவு புள்ளி விபரங்கள் இருக்கின்றன. பிரிட்டனின் வாழ்க்கைச் செலவு 135 சத விகிதமாக இருந்தது. இலங்கையிலோ 219 சத விகிதமாக வாழ்க்கைச் செலவு அதிகரித்திருந்தது. ரேஷன் பொருள்களுக்கு அரசாங்கம் பண உதவி புரிந்தால் வாழ்க்கைச் செலவைக் குறைக்க முடியும். இன்று வாழ்க்கைச் செலவை 4 சத விகிதம் குறைக்க வேண்டுமானால் அதற்கு அரசாங்கம் உணவுப் பொருள்களுக்கு உதவிப் பணமாக 10 கோடி ரூபா கொடுக்க வேண்டும்.

இலங்கையின் பொருளாதாரம்

இன்று உலகிலுள்ள செல்வம் உள்ள நாடுகளில் ஒன்றாக ஆஸ்திரேலியா விளங்குகிறது. இந்நாடு தன்னிடத்திலுள்ள மாவை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பொருளீட்டியுள்ளது. இலங்கையின் பொருளாதாரமும் தேயிலை, ரப்பர், தேங்காய் ஆகியவற்றிலே தான் தங்கியிருக்கிறது. இந்தப் பொருள்களால் கிடைத்த வருமானத்தைக் கொண்டே இறக்குமதிகளுக்கு பணம் செலுத்தி வரப்பட்டது. இப்பொழுது ஏற்றுமதி குறைந்து இறக்குமதி அதிகரித்து வருகிறது. ஏற்றுமதி புள்ளி விபரம் 221 சத விகிதமாகும். 1939ம் ஆண்டில இறக்குமதி ஏற்றுமதி தொடர்பில் இலங்கைக்கு சாதகமாக 90 சத விகித வருமானம் இருந்தது. இன்று நிலைமை மாறிவிட்டது. 1947 ஜனவரி முதல 1947 அக்டோபர் வரை ஏற்றுமதி மூலம் 73 கோடி ரூபாய் கிடைத்துள்ளது இதே காலத்தில் 82 கோடி 30 லட்சம் ரூபாய்க்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது இந்தக் காலத்தில் இலங்கை 9 கோடியே 70 லட்சம் ரூபாய் பொருள்களை மேலதிகமாக இறக்குமதி செய்துள்ளது.

பிச்சைக் கடன் வேண்டாம்

இலங்கையில் எடுக்கப்பட வேண்டிய பெரிய வேலைகளைச் செய்யவும் உணவுப்பொருள்களுக்கு பண உதவி செய்யவும் பிற நாடுகளில பிச்சைக் கடன வாங்காது இலங்கையால் செய்ய முடியும்.

வருமானத்தை அதிகரிக்க வரி விதிக்க வேண்டும்

வரி விதிக்கப்படாது இருக்கும் பகுதிகளையெல்லாம் ஆராய்ந்துபார்த்து வருமானத்தை அதிகரிக்க புதிய வரிகளை விதிக்க வேண்டும்.

இலங்கை பிரிட்டனுக்குப் பொருள்களை கட்டுப்பாடு விலையின்படி ஏற்றுமதி செய்தது. ஸ்டெர்லிங் நாடானபிரிட்டனுக்கும் இலங்கைக்கும் இருந்த இத்தொடர்பு காரணமாக இலங்கைக்கு கிடைக்க வேண்டிய 200 கோடி ரூபா கிடைக்காது போய்விட்டது. கட்டுப்பாட்டு விலையின்படி பொருள்களை ஏற்றுமதி செய்ததின் விளைவே இது.

தேசிய கடன் நிதி

1937-ம வருடத்தில தேசிய கடன் நிதி 19 கோடியே 40 லட்சம் ரூபாயாக இருந்தது ஆனால் இன்று 46 கோடியே 50 லட்சமாக அதிகரித்துவிட்டது வங்கிகளிலும் வெளி நாடுகளிலும் உளள பணம் 21 கோடி ரூபாய் இருக்கும்.

வரியும் வருமானமும்

இப்பொழுது வருமான வரி அதிகரித்துக்கொண்டு வருகிறது இலங்கையின் வருமானம் வரப்போகும் காலத்தில் கட்டாயம் குறைந்தேயாகும். தேசத்தின் வருமான நிலையே குறையும்போது வருமானமும் குறையுந்தானே. நேரடியான வரி 15 சத விகிதமும் மறைமுகமான வரி 56 சத விகிதமும் வசூலிக்கப்படுகிறது. இலங்கைக்கு கிடைக்கும் வருமானத்தில் மூன்றில் இரண்டு பங்கு வருமானம் மறைமுகமான வரியின் மூலமே கிடைப்பதாகும். நேரடியான வரி மூலம் 21 சத விகிதமும் மறைமுகமான வரி மூலம் 79 சத விகிதமும் கிடைக்கின்றன.

1947-48 நிதி வருடத்தில் வருமானமும் செலவும் தகுந்த திட்டமுறைப்படி தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நிதி வருடத்தில் நிலைமையில் நெருக்கடி ஏற்படாது. ஆகையால் பட்ஜெட்டை நான் சரிகட்டி திட்டம் தயாரிக்க விரும்பவில்லை தேசத்தின் பொருளாதார நிலையிலேயே மக்களின் சுபீட்ச வாழ்வு தங்கியிருக்கிறது.

1931-32 நிதி வருடத்தில் 70 லட்சம் ரூபாய் வருமான வரியாக கிடைத்துள்ளது 1945-46 நிதி வருடத்தில் 6 கோடியே 10 லட்சம் ரூபாய் வருமான வரியாக கிடைத்துள்ளது. ஆனால் 1947-48 நிதி வருடத்தில வருமான வரியாக 5 கோடி ரூபாய்க்கு மேல்போகமாட்டாது. இதனால் ஒருகோடிபத்து லட்சம் ரூபாய் வருமானம் குறையுமென்று கூறலாம்.

இந்தியாவை பின்பற்ற வேண்டும்

வரி விதிக்கும முறையில் இலங்கை இந்தியாவைப் பின்பற்ற வேண்டும். தனிப்பட்ட நபர் மீது விதிக்கப்படும் வரி விகிதம் இலங்கையில் அதிகரிக்கப்பட வேண்டும். கம்பெனிகளுக்கு இங்கு மிகவும் குறைந்த வரி விதிக்கப்படுகிறது. எஸ்டேட்டுகள் மீது விதிக்கப்படும் வரி உயர்த்தப்படவேண்டும். எஸ்டேட்டுகளின் வரியை 75 சத விகிதமதிகமாக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது.

எஸ்டேட்டுகளுக்கு வரி

ரூ 20,000 மதிப்புக்குட்பட்ட எஸ்டேட்டுகளுக்கு வரியில்லை ரூ. 20,000 முதல் ரூ 50,000 வரை மதிப்புள்ள எஸ்டேட்டுகளுக்கு இப்பொழுது ஒரு சத விகிதம் வரி வசூலிக்கப்படுகிறது. இதனை மூன்று சத விகிதமாக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது. ரூ 50,000 முதல் ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள எஸ்டேட்டுகள்வரை இப்பொழுது விதிக்கப்பட்டுவரும 2. 8 சத விகிதத்தை 4 சத விகிதமாக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது. ஒரு லட்சம் ரூபாய் முதல் ஒன்றரை லட்சம் ரூபாய் மதிப்புள்ள எஸ்டேட்டுகளுக்கு இப்பொழுது விதிக்கப்படுவரும் 4 சத விகித வரியை 5 சத விகிதமாக அதிகரிக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது. ஒன்றரை லட்சம் ரூபாய் முதல் இரண்டு லட்சம் ரூபாய் வரை மதிப்புள்ள எஸ்டேட்டுகளுக்கு இப்பொழுதுள்ள 5 சத விகித வரியை 7 சத விகிதமாக அதிகரிக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது. 2 லட்சம் ரூபாய் முதல் 5 லட்சம் ரூபாய்வரை மதிப்புள்ள எஸ்டேட்டுகளுக்கு இப்பொழுதுள்ள 6 சத விகித வரியை 10 சத விகிதமாக அதிகரிக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

குடிவகை புகையிலை வரி அதிகரிப்பு

குடிவகை வரியை அதிகரிப்பதால் 25 லட்சம் ரூபாய் வருமானமும் புகையிலை வரியை அதிகரிப்பதால் ரூ 21 லட்சம் வருமானமும் கிடைக்கும். சிகரெட்டின் ஒன்றின் விலை டின்னுக்கு 50 சதம் அதிகரிக்கும். பீடியின் மீதுள்ள வரி ராததலுக்கு ரூ 2 அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் ரூ. 20 லட்சம் அதிக வருமானம் கிடைக்கும்.

தேங்காய்திருவலுக்கு ஏற்றுமதிவரி

மோட்டார் கார், மற்றும் வண்டிகள், சாமான்களின் வரிகளை அதிகரிப்பதன்மூலம் ரூ 14 1/2 லட்சம் கிடைக்கும். தேங்காய் திருவலுக்கு ஏற்றுமதி வரி விதிப்பதன்மூலம் ரூ 40 லட்சம் வருமானமாக கிடைக்கும்.

அமித லாப வரி

அமித லாப வரிமூலம் 80 லட்சம ரூபாய் கிடைக்கும் வருமான வரி அதிகரிப்புமூலம் ரூ 50 லட்சம அதிகமாக கிடைக்கும். கம்பெனிகளுக்கு அதிக வரி விதிப்பதன்மூலம் ரூ 20 லட்சம கிடைக்கும்.

இதன்பின்னர் வரவு செலவு திட்டத்தின்மீது விவாதம் நடத்தப்படுவது ஒத்திவைக்கப்பட்டது.

உலக மலேரியா கமிட்டி

இந்திய சுகாதார நிபுணர் நியமனம்

புது, நவ 30

பம்பாய் மாகாண மலேரியா உதவி சுகாதார டைரக்டர் டாக்டர் டி. கே. விசுவநாதனை இந்திய சர்க்கார் உலக சுகாதார ஸ்தாபனத்தின் மலேரியா நிபுணர் கமிட்டியின் அங்கத்தினராக நியமித்திருக்கின்றனர். உலக மலேரியா நிபுணர்கள் இவ்விதம் நியமனம் பெற்ற ஐவர்களில் இவர் ஒருவர், 1948 மே மாதம் இக்கமிட்டி வாஷிங்டன் நகரில் கூடும். அதற்கு அவர் விஜயம் செய்யும் போது அவர் அமெரிக்க சுகாதார பிரசார முறைகளைப்பற்றி ஆராய்வார்.

வெங்காய இறக்குமதி வியாபாரிகளுக்கு நஷ்டம்

கொழும்பு, டிச. 1

எகிப்திலிருந்து வரும் வெங்காயத்தின் மீது துறைமுகச் சுகாதார அதிகாரிகள் தடை விதித்திருப்பதால் எகிப்திலிருந்தும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தும் வெங்காயம் இறக்குமதி செய்யும் வர்த்தகர்களுக்கு லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

தடையை நீக்குப்படி துறைமுக சுகாதார அதிகாரிகளிடம் முறையிட்டிருக்கிறார்கள்.

உணவுக் கமிஷனர் சென்னை சென்று செய்த முயற்சியால் இந்தியாவிலிருந்து தருவிக்கப்படும் வெங்காயத்தை உணவு கமிஷனரே வாங்கவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதால் இந்த இறக்குமதியிலும் வெங்காய இறக்குமதி வியாபாரிகளுக்கு பங்கெடுத்துக்கொள்ள வழியில்லை.

காலி நகரசபை வரவு செலவு

2 லட்ச ரூ பற்றாக்குறை

காலி, டிச 1

காலி நகர சபையின் 1948-ம வருடத்திய உத்தேச வரவு செலவுத் திட்டத்தின் நகல் தயாராகிவிட்டது. இத்திட்டத்தில் 253,209 ரூபாய் தண்டுவிழுகிறது வரவு ரூ. 964,670. செலவு ரூ. 1,217,879.

"பிரிட்டிஷ்படைகள்தான் இலங்கையைப் பணச்செலவின்றி பாதுகாத்து தரும்!"

(1-ம் பக்கத தொடர்ச்சி)

தோஷத்தைக் கொடுப்பதாகவும் கூறிவிட்டு அவர் தொடர்ந்து பேசியதாவது:-

இன்று பிரிட்டன் பல்லிழந்து நிற்கும் ஒரு சிங்கத்தைப் போல இருக்கிறது. இலங்கையிலே பிரிட்டனுக்குத் தளங்கள் ஏன் கொடுக்க வேண்டும் ஆசிய நாடுகள் ஒரு காலத்திலும் இலங்கை மீது படையெடுக்க முயற்சிக்க மாட்டா. ரஷியரின் படை யெடுப்பில் இருந்து இலங்கையைக் காப்பாற்றவே பிரிட்டனுக்கு இலங்கையில் தளங்கள் கொடுப்பதாகக் கூறப்பட்டது. அப்படி ரஷியா படை யெடுப்பில் அதனைத் தடுப்பது முடியாத விஷயமாகிவிடும். ஏனெனில் இலங்கை யுத்தத்துக்குத் தயாராகு முன் ரஷியா ஒரே முறையில் இலங்கையைப் பிடித்துவிடும். பாதுகாப்புக்காக இலங்கையில் பிரிட்டனுக்கு தளங்கள் கொடுப்பது எந்த முறையிலும் இலங்கைக்கு உதவப் போவதில்லை. பிரிட்டனுக்கு இங்கு தளங்கள் கொடுப்பது மிகப் பெரிய கொடிய யுத்தத்துக்கு உதவுவதாகவே இருக்கும்."

திரு என். எச். கீர்த்திரத்தினா பேசியபின் திரு பிரேம்லால் குமாரசிரி பேசுகையில், இப்பொழுது தேசத்தின்முன் தேசியத்துக்கும் வகுப்புவாதத்துக்கும் இடையிலுள்ள பிரச்னையே தீர்க்கப்படவேண்டியதென்றும் இப்பொழுது கிடைத்துள்ள சுதந்திரம் நிலவு வெளிச்சத்தைப் போன்றதென்றும், பொதுமக்களை ஏமாற்றி பிழையான வழியில் நடத்திச்செல்லுவதற்கு பிரதமர் முயற்சிப்பதாகவும், பிரிட்டனுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் சம்பந்தமான சகல தஸ்தாவேஜுகளையும் சபையில் பிரதமர் சமர்ப்பிக்கவில்லையென்றும் மக்கள் அவர்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு இது துரோகம் செய்வதாகும் என்றும் இப்பொழுது செய்துள்ள ஒப்பந்தங்கள் ஒரு வித பிரயோஜனமு மற்றவையென்றும் கிழக்கேயுள்ள நாடுகளில் பிரிட்டிஷார் தங்கள் பெண்களைமட்டும் ஜப்பான் படையெடுத்தபோது பாதுகாப்புக்காக வெளியேற்றினரேயன்றி இலங்கைப் பெண்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்காது விட்டுவிட்டனர் என்றும் இதுபோலவே அவர்கள் இலங்கையையும் காப்பாற்றுவார்கள் என்றும் அவர்களை நம்பி இலங்கையில் தளங்கள் கொடுப்பது சிறுபிள்ளைத்தனமான செய்கைகளேயென்றும் இங்கு வைக்கப்படும் பிரிடிஷ் துருப்புகள் தேச மக்களுக்கெதிராக உபயோகிக்கப்படமாட்டார்கள் என எவ்விதம் நம்பமுடியுமென்றும் தேசமக்கள் சந்தோஷமாக வாழவேண்டின் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் தொடர்புகள் முதலில் ஒழிக்கப்படவேண்டுமென்றும் கூறினர்.

இந்நிலையில் இரவு 8 மணியானதால் கூட்டம் இரவு போஜன இடைவேளைக்காக ஒத்திவைக்கப்பட்டது. இரவு போஜனத்துக்குப் பின் திரு பிரேம்லால் குமாரசிரி தொடர்ந்து பேசினார்.

கடந்த 132 வருடங்களாக வியர்வை சிந்த இரத்தத்தை பிழிந்து பிரிட்டனுக்கு இங்குள்ள மக்கள் உழைத்துக்கொடுத்தார்கள். உடன்படிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டால் இலங்கை மக்கள் எல்லை குறிப்பிடாத காலம்வரை அடிமைகளாகவே இருக்க நேரிடும்.

பிரிட்டனின் திரிகோணமலை

திரிகோணமலை துறைமுகம் தமிழர்களதென்றும் கண்டியர்களதென்றும் உரிமை பாராட்டப்படுகிறது இந்த இடம் கண்டியர்களதுமல்ல, தமிழர்களதுமல்ல ஆனால் இத்தளம பிரிட்டிஷாரது.

திரு எம். எல். காரியப்பர் பேசியபின் திரு அட்டியகல [ரத்தினபுரி தொகுதி] பேசினார்.

திரு வி. டொன் சுகததாஸா, திரு. வில்மட் பெரேரா, திரு ஜே. ஸி. டி. கொத்தலாவல முதலியோர் பேசியபின் திரு ஆ. ஆர். மோத்தா பேசினார் இத்தருணத்தில் இரவு பத்து மணியானதால் கூட்ட நடவடிக்கைகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங் கவரும் உயரிய நடிப்புகள் நிறைந்த

கன்னிகா

தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் படம்

என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம் எஸ். சரோஜினி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது!

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு

முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்

"இழந்த உறுதி"

என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்

புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

சர்வதேச தொழில் ஸ்தாபன அதிகாரி

இலங்கையில் சுற்றுப் பயணம்

கொழும்பு, டிச. 1

சர்வ தேச தொழில் ஸ்தாபனத்தின் கூட்டுறவுப்பகுதி அதிகாரியான திரு எம். கொலர் பெயின் இலங்கையில் சுற்றுப் பிரயாணம் செய்ய வந்திருக்கிறார். இங்கு அவர் மொத்தக் கூட்டுறவு விற்பனை சங்கங்களைப் பார்வையிடுவார்.

அதன்பின் ஈரானில் கூட்டுறவு இயக்கத்தை ஸ்தாபிக்க ஈரான் சர்க்கார் அவரை அழைத்திருப்பதால் வெள்ளிக்கிழமையன்று அவர் ஈரானுக்கு விமானத்தில் பயணமாவார். இவர் இங்கு வருவதற்குமுன் டில்லியில் நடைபெற்ற ஆசிய தொழிலாளர் மகாட்டுக்கு விஜயம்செய்து விட்டு இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து அங்கு கூட்டுறவு இயக்கத்தைப்பற்றிப் பரிசீலனை செய்தார்.

இலங்கையின் கூட்டுறவு இயக்கம்பற்றி அவர் கூட்டுறவு மந்திரி திரு ஏ. ரத்னாயகா, கூட்டுறவு கமிஷனர் திரு ஜி. டி சொய்சா ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

கண்டி-பேராதனியா பஸ் போக்குவரத்து

கண்டி, டிச. 1

ரயில் பாலம் பழுதுபார்க்கப்படும்வரை பேராதனியா ரயில்வே ஜங்ஷனுக்கும் கண்டிக்குமிடையே ரயில்வே பஸ் போக்குவரத்து இன்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கண்டிக்கு டிக்கட் எடுப்பவர்கள் பேராதனியா ஜங்ஷனிலிறங்கி நேராக இந்த பஸகளில் ஏறி கண்டி போய்ச் சேரலாம் பாலம் கட்டி முடிந்து கண்டிக்கு ரயில் போகும்வரை இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

பருத்தி ஏற்றுமதிக்கு இந்திய சர்க்கார் தடை

பாகிஸ்தானுக்கும் தடை

புதுடில்லி, நவ 30

நெடும் இழைப் பஞ்சு 13/16 ரகமும் அதற்கு மேற்பட்ட ரகங்களும் இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கும் பாகிஸ்தானுக்கும் ஏற்றுமதி பாவதை இந்திய சர்க்கார் தடை செய்துவிட்டிருக்கிறார்கள்.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் ஆண்டு டிசம்பர் மீ 3உ இந்த பத்திரிகை 194A, கட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறவது.

இருமல் இளைப்பு சுகம்

T. B.& Asthma

இருமல், கபக்கட்டு, கபத்துடன் இரத்தம் விழுதல், மாலை நேரங்களில் காரம் வருதல், உடம்பு இளைத்து வருதல், உள்ள [T. B.] க்ஷயரோகத்திற்கும், இளைப்பு, ஏங்கல், மூச்சுத்திணறல், பீனிசம், தடுமன் ஆகிய உபாதைகளுடன் கூடிய (Asthma) சுவாசகாசம் மந்தாரகாசத்திற்கும் நிகரற்ற சஞ்சீவி.

20 வருட அனுபவம் பெற்ற மருந்துகள். ஆயிரக்கணக்கான பேர்கள் சாப்பிட்டுச் சுகம்பெற்றது.

25 நாள் தாளகபஸ்பமும், சித்திர மூலச்சூரணமும் ரூபா 12-8-0

தண்டபாணி வைத்தியசாலை,

பெரியகடை வீதி, பழனி. (S. I)

ஐசிங் சுகர்

இலங்கையில் முதல்தரமானது

குயின் (ராணி) மார்க்.

இப்போ எங்களுக்கு ஏற்பட்ட சில வசதிகளால் விலை மிகவும் குறைக்கப்பட்டு இருக்கின்றது.

7 ருத்தல் டின்னில் அந்தர் ஒன்றுக்கு ரூ. 160-00

28 ருத்தல் டின்னில் அந்தர் ஒன்றுக்கு ரூ. 150-00

எங்கள் ஸடோர் நிர். 307, செட்டியார் தெருவில் (சீ ஸடிரீட்) எடுத்துக்கொள்ளலாம்.

குயின் (ராணி) கன்பெக்ஷன் கம்பெனி,

861, அலுத்மாவத்தை ரோடு,

முகத்துவாரம்,

கொழும்பு.

தந்தி "Confection" போன்: 4511

ஈகிள் ஹவுஸ் உயர்தர தாதுசத்துகளுள்ள பானங்களுக்கு இணையற்றது

தாதுசத்துக்கள் நிறைந்த கீழ்க்கண்ட எமது குளிர் பானங்களைக் கையிருப்பு வைத்திருக்கும்படி உங்கள் வியாபாரிகளைத் தூண்டுங்கள்:—

ஓரஞ்ச் பார்லி

லெமன் பார்லி

வைன்டோ

வைனோ

வினோ

பலதரப்பட்ட குளிர் பானங்கள்

பழ இரசங்கள்

டி ஸைடர்

சம்பேன் ஸைடர்

ஸ்பெஷல் ஸைடர்

தந்தி:- "ஈகிள் ஹவுஸ்" நிர். 41, பார்பர் வீதி, போன்:- 2193 கொழும்பு.

ஏஜண்டுகள் இல்லாத பகுதிகளுக்கு ஏஜண்டுகள் தேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org